கல்கி



KALKI பிப்ரவரி 23, 1947 4 அணா

# தி இந்தியன் பாங்க்
லிமிடெட்

★

தலைமை ஆபீஸ் :
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள் :
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 71,10,900
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 51,67,608
ரிசர்வ் நிதி ரூ. 61,50,000

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி





## இந்தியாவினுடையது

ஹிந்த் ஸைகில்கள் பல வருஷங்களாக நாட்டிலுள்ள பலவகைப்பட்ட நிலைமைகளை — ரோடுகளின் விதங்கள், கனத்த மழை காலம், — இந்தியாவுக்கேற்ற ஸைகிள் உற்பத்தி செய்வதில் கவனிக்கப்பட வேண்டிய மற்ற அம்சங்களையும் — நன்கு ஆராய்ந்ததின் பலனாக இந்தியாவிலுள்ள மிகப்பெரிய ஸைகிள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்றன.



உற்பத்தி செய்பவர்கள் ஹிந்த் ஸைகிள்ஸ் லிமிடெட்

HIND

சென்னை ராஜதானிக்கு (சமஸ்தானங்கள் உள்பட) விற்பனை உரிமையாளர்கள் :
டி லக்ஸ் டிரேடிங் கோ.,
பாலக்கரை, திருச்சிராப்பள்ளி.
பிராஞ்சு :
11, பிராட்வே, மதராஸ்.

எங்கும் கிடைக்கும்



# வழக்கப்படி எமது முன்னேற்றம்

1946ல் முற்றுப் பெற்ற வியாபாரம் 5·70 கோடிக்குமேல்

1945ல் 5·50 கோடிகள்

## நாஷனல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
7, COUNCIL HOUSE STREET, CALCUTTA
மதராஸ் பிராஞ்சு : "நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்"
362, சைனாபஜார் ரோடு, எஸ்பிளனேட், மதராஸ்
சப் ஆபீஸ்கள் : பெங்களூர், மதுரை
N.I.F.-TAS






# கல்கி
## பொருளடக்கம்


மலர் 6, இதழ் 30 — **1947 பிப்ரவரி 23** — வியஹு, மாசி 11



| | | |
|---|---|---|
| என்ன சேதி? | ... | 5 |
| என்ன சொல்லுகிறீர்கள்? | சாஸ்திரி | 7 |
| மருந்து பலிக்குமா? | ... | 9 |
| புலி வந்துவிட்டது! | ... | 12 |
| அக்கப்போர் | "சக்கைப்போடு" | 15 |
| நவகாளி யாத்திரை | சாவி | 18 |
| வானசஞ்சாரம் | இசைத்தேனீ | 24 |
| சோலைமலை இளவரசி | கல்கி | [illegible] |
| பங்காவாலா | எஸ். விஜயராகவன் | 35 |
| காலக்ஷேபம் | ... | 41 |
| இரு நண்பர்கள் | சுதர்சன் | 42 |
| பாவம், டாக்டர்! | ஸோமாஸ் | 46 |



128235
சென்னை-600 008


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனை.

ஏசுநாதரைப் போலவும், புத்த பகவானைப் போலவும் இன்று காந்திமகான் அன்பு மதத்தைப் பரப்பக் கீழ் வங்காளத்தில் புனித யாத்திரை செய்து வருகிறார். இதுவரை நவகாளி, திப்பெரா ஜில்லாக்களில் சுமார் 40 கிராமங்களுக்கு மேலாகக் கால்நடையாகவே நடந்து சென்றிருக்கிறார். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தினம் தங்கி அங்கங்கேயுள்ள ஹிந்து முஸ்லிம்களைக் கூட்டி மாலைவேளைப் பிரார்த்தனையின் போது, குரான், பைபிள், கீதை முதலிய மூல கிரந்தங்களிலிருந்து சில வாசகங்களைப் படிக்கச் சொல்லி "கடவுள் ஒருவரே! அன்பே கடவுள்" என்பதை விளக்கி அஹிம்சைக் கொள்கையை ஸ்தாபித்து வருகிறார்.




உலகோத்தமரான மகாத்மாஜியின் பணி வாசகங்களைக் கேட்டு நவகாளி மக்கள் மனம் கசிந்து, நடந்துபோன மிருகப் பிராயமான செய்கைக்காக வருந்துகிறார்கள். முக்கியமாக, முஸ்லிம் மாதர்கள் மகாத்மாவை அன்புடன் வரவேற்று அவருடைய போதனைகளைச் சிரத்தையுடன் கேட்டு வருகிறார்கள்.

ஸாதுர்கில் என்ற கிராமத்தில் புஷ்பஹாரங்களுடன் மகாத்மாஜியை வரவேற்பதற்காக முஸ்லிம் மாதர்கள் தயாராக நிற்கும் காட்சியை இந்த இதழின் அட்டைப் படத்தில் காணலாம்.

"இந்த யாத்திரை என்னுடைய அஹிம்சாக் கொள்கைக்கு இறுதிப் பரீட்சை. கீழ் வங்காளத்தில் பரிபூர்ண அமைதி நிலவி, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சகோதர பாவத்துடன் வாழும் நிலைமை ஏற்படும்வரை என் வாழ்நாளை இங்கேயே கழிப்பேன்" என்கிறார் காந்தி மகாத்மா.

*

மகாத்மாஜி! பாரத தேசம் பூராவும் தங்கள் சேவையை எதிர்பார்த்து நிற்கிறது. அப்படியிருக்க, நவகாளி மக்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் இந்தச் சிறு காரியத்துக்காக அபகரித்துக் கொண்டுவிட மாட்டார்கள். தங்களுடைய நல்லுபதேசம் நாற்பது கோடி மக்களுக்கும் பயன்பட வேண்டும். தங்களால் பாரத மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும். ஆண்டவன் அருள்புரிவாராக!








கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 30

# என்ன சேதி?

## பெரும் ஆபத்து

சென்னை சர்க்காரின் நிர்வாகத் திறமைக் குறைவாலும் அசிரத்தையாலும் இம் மாகாணத்துக்கு மற்றொரு பெரும் ஆபத்து நேர்ந்திருக்கிறது. கோயமுத்தூரில் தற்போது நடந்து வரும் வேலை நிறுத்தம் இன்னும் சில வாரங்கள் வரை தொடர்ந்து நடக்குமானால், நம்முடைய காருண்யம் மிக்க சென்னை சர்க்கார் இம் மாகாண வாசிகளுக்குப் படியளந்திருக்கும் ஐந்து கெஜம் துணியில் ஒரு கெஜம் துணி கூடக் கிடைக்காது என்பதில் சந்தேகமேயில்லை.

ஒன்றிரண்டு ஆலைகள் அல்ல, முப்பத்திரண்டு ஆலைகள். சுமார் 50,000 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். வேலை நிறுத்தம் ஆரம்பமாகி ஏறக் குறைய ஒரு வார காலமாகிறது. நிலைமையில் ஒரு விதமான அபிவிருத்தியையும் காணோம்.

அபிவிருத்திக்குப் பதிலாக நிலைமை முன்னிலும் மிக்க மோசமாகவே ஆகியிருக்கிறது. 'ஒட்டக்கூத்தரின் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பது போல ஆலை முதலாளிகள் சமரச வார்த்தைக்குக் கொஞ்சமும் இடம் வைக்காமல் எல்லா மில்களையும் இழுத்துச் சாத்திப் பலமான பூட்டையும் போட்டு விட்டார்கள்.

## கவலை யாருக்கு?

மில் முதலாளிகளைக் குறை சொல்லிப் பலன் என்ன? இம்மாகாண வாசிகளுக்கு உடைப் பஞ்சம் ஏற்படக் கூடாதென்ற கவலை அவர்களுக்கு இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது சரியா? அந்தக் கவலை சர்க்காருக்குத்தான் இருக்க வேண்டும்.

முதலாவதாக, வேலை நிறுத்தம் ஏற்படாதவாறு அவர்கள் பார்த்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். அல்லது ஏற்பட்ட பிறகாவது உடனே அந்த வேலை நிறுத்தத்தை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளையாவது செய்திருக்க வேண்டும். சென்னை சர்க்கார் இரண்டையும் செய்யவில்லை.

பிரதம மந்திரி பிரகாசம், உடனே கோயமுத்தூருக்குச் சென்று வேலை நிறுத்தத்தை நிறுத்துவதற்குப் பதிலாக, டில்லியிலே உணவு மகாநாட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு, சர்தார் படேலையும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும் பார்ப்பதிலே காலத்தைக் கழித்துவிட்டுச் சாவகாசமாக வந்திருக்கிறார். பாவம், அவரைக் குறை சொல்லி என்ன பிரயோஜனம்? அவருடைய பிரதம மந்திரிப் பதவிக்கே ஆபத்துவந்திருக்கும்போது, இந்தக் கோவை வேலை நிறுத்தம் அவ்வளவு பெரிய காரியமா, என்ன!

## எப்படிக் கேட்கலாம்?

'தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை யெடுக்க, தம்பி கும்பகோணத்திலே கோதானம் பண்ணுகிறானாம்' என்பதாக ஒரு பழமொழி உண்டு. வங்க சர்க்கார் அம்மாதிரியான காரியம் ஒன்றைச் செய்து வருகிறது.

நவகாளிக் கலகத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு வங்க சர்க்கார் உருப்படியாக எதையும் செய்ததாகக் காணோம். ஆனால், பீகாரிலிருந்து சென்ற முஸ்லிம் அகதிகளுக்கு அவர்கள் இதுவரை 50 லட்ச ரூபாய் செலவு செய்திருக்கிறார்களாம்; இன்னும் 50 லட்ச ரூபாய் செலவு செய்யப் போகிறார்களாம்.

இம்மாதிரியான செலவுகள் எல்லாம் செய்தால் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழாமலா இருக்கும்? இவ் வருஷம் வங்க பட்ஜெட்டில் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்காக ஜனாப் சுஹூர்

வர்த்தி மத்திய சர்க்காரைக் கடன் கேட்டிருக்கிறாராம்.

ஜனாப் சுஹ்ரவர்த்தி எந்த முகத்தை வைத்துக் கொண்டு இந்திய சர்க்காரைக் கடன் கேட்டிருக்கிறாரோ தெரியவில்லை. கொஞ்ச நாளைக்கு முன்பு அவர் செய்த ஒரு பிரசங்கத்தில், வங்காளம் இந்தியாவை விட்டுப் பிரிந்து சுயராஜ்யம் ஏற்படுத்திக் கொள்ளப் போவதாக வீம்பு பேசியது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கலாம். அன்று அப்படிச் சொன்னவர் இன்று மத்திய சர்க்காரிடம் பிச்சை கேட்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது?

## முதல் பட்ஜெட்

இத்தனை வருஷ காலம் இந்திய சர்க்கார் மத்திய சட்ட சபையிலே சமர்ப்பித்து வந்த ரயில்வே பட்ஜெட்டுக்கும் டாக்டர் ஜான் மத்தாய் இப்போது சமர்ப்பித்திருக்கும் ரயில்வே பட்ஜெட்டுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருக்கிறது.

முதல் முதலாக ஒரு இந்தியர் தயாரித்த முதல் ரயில்வே பட்ஜெட் இதுவேயாகும்.

மேற்படி பட்ஜெட்டில் ரயில்வேக் கட்டணத்தை உயர்த்தப் போவதாக டாக்டர் மத்தாய் சொல்லி யிருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

இதற்குக் காரணம் என்னவென்பதையும் அவர் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்.

பட்ஜெட்டில் மொத்தம் 10½ கோடி ரூபாய் துண்டு விழுகிறதாம். இதைச் சரிக்கட்டுவதற்காகப் பிரயாணிகளின் கட்டணத்தை ரூபாய்க்கு ஓரணாவாக உயர்த்தினால், 4¾ கோடி ரூபாய் கிடைக்குமாம். சரக்குக் கட்டண உயர்வு மூலம் 5¾ கோடி ரூபாய் கிடைக்குமாம்.

பிரயாணக் கட்டண உயர்வோ சரக்குக் கட்டண உயர்வோ பொது ஜனங்களை அதிகமாகப் பாதிக்காதென்று டாக்டர் மத்தாய் நமக்குத் தைரியம் சொல்லுகிறார்.

டாக்டர் மத்தாய் எதற்காக நமக்குத் தைரியம் சொல்ல வேண்டும்? ரயில்வேக் கட்டணத்தை உயர்த்த வேண்டி நேர்ந்ததற்கு அவர் சொல்லி யிருக்கும் காரணங்களையும் அசைக்க முடியாத சமாதானங்களையும் பார்க்கும் போது தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று பொது ஜனங்களாகிய நாம் அல்லவா சந்தோஷப்பட வேண்டும்! இதே நிலைமையில், ரயில்வே இலாகா ஒரு வெள்ளைக்காரர் கையில் இருந்தால், அந்தப் புண்ணியவான் ரூபாய்க்கு ஓர் அணா என்ன — ரூபாய்க்கு ரூபாயே கூட உயர்த்தினாலும் உயர்த்தி யிருக்கலாம். நல்ல வேளையாக, நம்முடைய தேசிய சர்க்கார் ரூபாய்க்கு ஓரணாவுடன் நின்றுவிட்டார்கள்.

## நல்ல சேதி

டாக்டர் மத்தாய் தம்முடைய பட்ஜெட் பிரசங்கத்திலே, இந்தக் கட்டண உயர்வைத் தவிர மற்றொரு நல்ல சேதியையும் சொல்லியிருக்கிறார்.

ரயில்வே எஞ்ஜின்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதற்காகப் பல கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போவதாகவும், அதில் வருஷம் ஒன்றுக்கு 200 எஞ்ஜின்கள் தயாராகும் என்பதாகவும் அவர் சொல்லி யிருக்கிறார்.

ரயில்வே எஞ்ஜின்களை இந்தியாவிலேயே தயாரிக்க வேண்டும் என்று பலர் பல வருஷ காலமாகச் சொல்லிவந்தார்கள். ஆனால் அதிகார வர்க்க சர்க்கார் அதற்குக் கொஞ்சமும் செவி சாய்க்க வில்லை. இப்போது நம்முடைய தேசிய சர்க்கார் மூலம் நம்முடைய தேச பக்தத் திருக்கூட்டத்தின் கனவுகளிலே ஒன்று பூர்த்தியாகப் போவதை யறிந்தால் இந்தியர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி யுண்டாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

டாக்டர் மத்தாய் விரைவில் மேற்படி தொழிற்சாலையை ஆரம்பித்து, நாம் எல்லோரும் முதல் முதலாக இந்தியாவிலே செய்யப்பட்ட ரயில்வே எஞ்ஜினில் செல்லும் பாக்கியத்தை அளிக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

### ஒரு திருத்தம்

சென்ற இதழில் வெளியான, "அடிமையின் வேண்டுகோள்" என்ற பாடலில்,

ஆயினும் அவ்விடம் போயென் செய்வது?
கள்ளின் வெறியிலே கரைந்துபோய் விட்டது

என்று இருப்பதை,

ஆயினும் அவ்விடம் போயென் செய்வது?
கையினில் இருந்த காசெலாம் கடையிலே
கள்ளின் வெறியிலே கரைந்துபோய் விட்டது

என்பதாகத் திருத்தி வாசித்துக் கொள்ளும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.



## என்ன சொல்லுகிறீர்கள்?






# மருந்து பலிக்குமா?

கனவா அல்லது நனவா என்று பிரமிக்கும்படியான சம்பவம் நிகழும் போது எவரும் தமது கண்களைத் துடைத்துக் கொண்டு, அதை ஒரு முறைக்குப் பன்முறையாக உற்றுப் பார்ப்பது வழக்கம்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி பெவின் சென்ற வாரம் செய்துள்ள பிரசங்க விவரங்கள், இந்திய மகா ஜனங்களை அவ்வாறு பிரமிக்கச் செய்திருக்கும் என்பது நிச்சயம்.

இந்திய சர்க்காரின் ஸ்தானீகராக அமெரிக்காவுக்குச் செல்லும் ஸ்ரீ ஆஸப் அலிக்கு லண்டனில் ஒரு விருந்தளிக்கப் பட்டது. அப்போது பெவின் செய்த பிரசங்கத்தை, இந்தியர்கள் கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பத் திரும்ப வாசித்திருப்பார்கள்.

இந்தியாவிடம் மிகுந்த அனுதாபமும் அபிமானமும் உள்ள பல பிரிட்டிஷ் அறிஞர்கள் இருக்கின்றனர் என்பது உண்மையே.

ஆனால், பெவின் அக் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல.

அது மாத்திரமில்லை; அவர் ஓரளவு சர்ச்சிலின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் கூடப் பெற்றவர்!

தொழிற் கட்சி சர்க்கார் என்றாலே சர்ச்சிலுக்கு வேப்பங் காயாக இருக்கிறதென்பது உலகம் அறிந்த உண்மை.

சமீபத்தில் கூட சர்ச்சில், தொழிற் கட்சி மீது தமக்குள்ள ஆத்திரத்தைப் பார்லிமெண்டில் பகிரங்கப்படுத்தினார்.

"தொழிற்கட்சி சர்க்கார் மந்திரிகள் மகா மோசமான பேர்வழிகள். அவர்களுக்கு நிர்வாகத் திறமையில்லை. அவர்கள் கோழைகள். நான் யுத்தத்தில் வெற்றி பெற்று பிரிட்டனின் அந்தஸ்தைக் கண்களுக்கு எட்டாத தூரத்துக்கு உயர்த்தினேன். அப்படியிருந்தும், என்னுடைய மகத்துவத்தை அறியாத பிரிட்டிஷ் பொது ஜனங்கள் சென்ற பார்லிமெண்டுத் தேர்தலில் என் கட்சியின் காலை வாரி முதுகில் மண் படும்படி செய்து விட்டார்கள். அதன் பலன் இப்போது தெரிந்து விட்டது. மிக மிக உயரத்தில் இருந்து வந்த பிரிட்டனின் அந்தஸ்து இன்று உலக நாடுகளின் தெருப் புழுதியில் புரண்டு வருகிறது. நல்ல வேளையாக, மந்திரி பெவின் மாத்திரம் வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்ட மட்டிலாவது பிரிட்டனின் மானத்தைக் காப்பாற்றி வருகிறார்."

மேற்கூறிய விதம் சென்ற பார்லிமெண்டுக் கூட்டத்தின்போது பெவினுக்குச் சர்ச்சில் சர்டிபிகேட் கொடுத்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

எனவே, இந்தியாவின் ஜன்ம சத்துருவான சர்ச்சிலின் அன்புக்குப் பாத்திரராக விளங்கும் பெவின், இந்தியாவின் சுதந்திரத்துக்காகக் கண்ணீர் வடிப்பதென்றால், அது பிரமிக்கத்தக்க ஒரு விஷயமல்லவா?

* * *

பெவின் பிரசங்கத்ின் சாரம் இதுதான்:

"உலக அமைதிக்கும் 'சுபிட்சத்துக்கும் உற்ற மருந்து ஐக்கிய இந்தியாவே. இந்தியா இரண்டு படுவது உலக யுத்தத்துக்கு நிரந்தரமாக விதை விதைப்பதாகும். இந்தியா, உக்ரமான உள்நாட்டுப் போருக்கு இலக்காகும்படி விட்டுவிடக் கூடாதென்பதும், இந்தியாவின் நிர்வாகத்தை எவ்வித சீர்குலைவுமின்றி இந்தியர்களிடம் ஒப்புவித்து விட வேண்டு'மென்பதும்தான் எங்களுடைய மகத்தான ஆர்வம். ஒருபுறம் ருஷ்ய ஏகாதிபத்தியக் கரடியும் மற்றொரு புறம் அமெரிக்க ஏகாதிபத்தியக் கழுகும் இந்தியர்மீது பாயத் தயாராக இருந்து வருகின்றன. பிரிட்டனோ, உலகில் எங்கு சாத்தியமோ அங்கெல்லாம் சுதந்திரத்தை நிலைநாட்டி வருகிறது" என்று பெவின் பிரலாபித்திருக்கிறார்.

பெவினின் மேற்படி பிரசங்கம், பிரசாரக் கலையில் பிரிட்டனுக்குள்ள இணையற்ற சாமர்த்தியத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

அரசியல், பொருளாதாரம், கலாசாரம் முதலிய எல்லாத் துறைகளி

லும் இந்தியாவைச் சீர்குலைத்து, இருநூறு ஆண்டுகள் வரை கொடிய ஏகாதிபத்தியம் செலுத்தி வந்துள்ள பிரிட்டிஷ் சர்க்காரின் மந்திரி ஒருவர், ருஷ்ய ஏகாதிபத்தியமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் இந்தியா மீது பாய்ந்து விடுமே என்று நீலிக் கண்ணீர் வடிப்பதும், பல இடங்களிலும் தாங்கள் சுதந்திரத்தை நிலை நாட்டி வருவதாகக் கூறுவதும் துணிகரமானதொரு பித்தலாட்டப் பிரசாரமே யாகும்.

* * *

பிரிட்டன் அளிக்கும் சுதந்திரம் எத்தகையது என்பதற்கு இன்று பாலஸ்தீனத்தைக் காட்டிலும் பிரத்தியட்ச உதாரணம் வேறெதுவும் தேவையில்லை.

அராபியர்கள் அமைதியாக வாழ்ந்து வந்த பாலஸ்தீனத்தைப் பிரிட்டிஷார் பாக்கிஸ்தான் செய்ய முயற்சித்தார்கள். அதிலிருந்துதான் பாலஸ்தீனத்தில் படுகளம் பிரமாதமாகியது. பல வருஷங்களாகியும் அங்கு படுகளம் உக்ரமாகி வருகிறதேயல்லாமல், தணிவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

பாலஸ்தீனப் படுகளத்துக்கு விதை விதைத்த பாவம் முழுதும் பிரிட்டனுக்கே ஏகபோக பாத்தியமானது. அதனால் ஏற்பட்ட, இன்றும் ஏற்பட்டு வரும், நரபலிகள் எண்ணிக்கையில் அடங்கா.

அறுபதாயிரம் யூதர்கள்கூட இராத பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷார், அங்கு தங்களுடைய இரும்புப் பிடி தளராமல் இருப்பதற்காக, ஆறு லட்சம் யூதர்களைக் கொண்டு வந்து நுழைத்தார்கள். அங்கு அராபியருக்கு விரோதமாக யூதருக்கும், யூதருக்கு விரோதமாக அராபியருக்கும் தூபம் போட ஆரம்பித்தார்கள்.

பின்னர் அராபியர் — யூதர் பிரச்னையைத் தீர்ப்பதற்காகப் பாலஸ்தீனத்தைப் பிளந்து பாக்கிஸ்தான் செய்ய முற்பட்டார்கள்.

அவர்கள் கைக்கொண்ட ஒவ்வொரு முறையும் முற்றிலும் சுயநல நோக்கம் கொண்டதே யன்றி, யூதர்களின் வாழ்வு பற்றியோ, அல்லது அராபியர்களின் வாழ்வு பற்றியோ, பிரிட்டிஷாருக்கு அணுவளவும் அக்கறை கிடையாது.

சென்ற யுத்தத்துக்கு முன் பிரிட்டிஷார் யூதர்களை ஆதரித்து வந்தார்கள். ஆனால், இப்போது நிலைமை மாறி விட்டது.

அதாவது, மத்திய கிழக்கு ஆசியாவில் ருஷ்ய எதிர்ப்புக் கோஷ்டியைப் பலப் படுத்துவதற்காக, இப்போது அவர்கள் அராபியர்களிடம் 'அன்பு' காட்ட வேண்டியதாக இருக்கிறது.

* * *

பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இனி எவ்வித சமரசமும் ஏற்படுவது சாத்தியமில்லை. ஆகையால், அப்பிரச்னையை ஐக்கிய நாடுகளின் முடிவுக்கு விட பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித் திருக்கிறார்கள் என்ற செய்தியை உலகத்துக்குச் சென்ற வாரம் அறிவித்தவரும் பெவின்தான்.

பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷார் எவ்விதப் பித்தலாட்டமும் செய்யாமல் இருந்திருப்பார்களாயின், பல ஆண்டுகளுக்கு முன்பே யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் ஏதாவதொரு சமரசம் ஏற்பட்டிருக்கும். எங்களுக்குப் பாலஸ்தீனத்தில் தனி ராஜ்யம் அதாவது பாக்கிஸ்தான் வேண்டுமென்று யூதர்களும் கூறியிருக்க மாட்டார்கள்.

தங்களுக்குப் பாக்கிஸ்தான் கிடைக்கா விட்டால் உலகையே ஆட்டி வைத்து விடுவதாக ஆர்ப்பாட்டம் செய்துவரும் இந்திய முஸ்லீம் லீக்கர்களும், பாலஸ்தீனத்தில் யூதர்கள் கோரும் பாக்கிஸ்தானத்தை மாத்திரம் வெகு ஆக்ரோஷத்துடன் கண்டிக்கும்படியான அவசியமும் ஏற்பட்டிராது!

* * *

மற்றும் பாலஸ்தீனப் பிரச்னையைத் தீர்க்க பெவின் கூறியுள்ள மருந்து பலனைக் கொடுக்குமா வென்பது சந்தேகந்தான். ஏனெனில், தங்களுடைய பிறப்புரிமைகளைப் பாதிக்கும் விஷயமாகத் தாங்கள் ஐக்கிய நாடுகளின் முடிவுக்குக் கட்டுப்பட முடியாதென்பதை அராபியர்கள் இப்போதே தெளிவாகக் கூறி விட்டார்கள்.

தவிர, ஐக்கிய நாடுகளின் முடிவுக்கு விடுவதன் மூலம் பாலஸ்தீனப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. அவ்வாறு செய்வது பிரிட்டிஷ் சர்க்காரின் காலங் கடத்தும் வித்தையில் ஒரு படலமே யன்றி வேறெதுவுமில்லை.

பாலஸ்தீனத்தில் படுகளம் ஓய்ந்து அமைதி ஏற்பட வேண்டு மென்பது உண்மையாகவே பிரிட்டிஷ் சர்க்காரின்



## காசியில் ராஜாஜி



சென்ற ஜனவரி மாதம் 27-ம் தேதி காசி சர்வ கலாசாலை முழுவதும் ஒரே கோலாகலமாகவும் குதூகலமாகவும் விளங்கிற்று.

அன்றைய தினம் தமிழ் நாட்டுத் தலைவரும் இந்திய இடைக்கால சர்க்கார் மந்திரிகளுள் ஒருவருமாகிய ராஜாஜி காசி யிலிருந்து சர்வ கலாசாலையிலே பல அற்புதமான சொற்பொழிவுகள் நிகழ்த்தி மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவுக்கு விருந்தளித்தார்.



மேலேயுள்ள படத்தில் வலது புறக் கடைசியில் நிற்பவர்தான் காசி வித்யா பீடத்தின் சான்ஸலரான டாக்டர் பகவன்தாஸ். கீழே சர்வ கலாசாலை தமிழ்ச்சங்க மாணவர்களுடன் ராஜாஜி உற்சாகமாகப் பேசிக் கொண்டு செல்வதைக் காணலாம்.

கண்ணன்

போட்டோ: பாலு.

நோக்கமாக இருக்குமாயின், அதற்கு மேற்படி மருந்து பலிக்குமா என்பது சந்தேகம்தான்.

* * *

பாலஸ்தீனம் மாத்திரமல்ல, ஆசியாவிலுள்ள மற்றும் பல நாடுகளும் இன்று அமைதியின்றித் தவித்து வருவதற்கு மூல காரணமாக இருந்து வருவது பிரிட்டிஷ் சர்க்கார் கொண்டாடும் தர்ம கர்த்தா உரிமைதான்.

எனவே, அவர்கள் தர்ம கர்த்தா உரிமையைக் கைவிட்டு, சமய சஞ்சீவிகளைத் தட்டிக் கொடுத்து பிரித்தாளும் சூழ்ச்சியையும் நிறுத்திக் கொள்வார்களாயின், இன்று ஆசியா நாடுகளை அல்லலப்படுத்தி வரும் பெரும்பாலான இன்னல்களும் மறைந்தொழியும்.

* * *

நிற்க, பெவினுக்குப் பதிலளித்த ஸ்ரீ ஆஸப் அலி ருஷ்ய, அமெரிக்க ஏகாதிபத்தியப் பூச்சாண்டிகளைக் கண்டு இந்தியா சிறிதும் மிரள வில்லை யென்பதை பிரிட்டிஷாருக்குத் தெளிவுபடுத்தி யிருக்கிறார்:

"பிரிட்டனையோ, ருஷ்யாவையோ, அல்லது அமெரிக்காவையோ விரோதியாகப் பாவிக்க இந்தியா தயாராக இல்லை. அம்மூன்று வல்லரசுகளுடன் மாத்திரமல்ல, உலகிலுள்ள சகல நாடுகளுடனும் ஒத்துழைத்து வர வேண்டும் என்பதே இந்தியாவின் அபிலாஷை. அன்பையும், நட்பையும், பரஸ்பர ஒத்துழைப்பையுமே அஸ்திவாரமாகக் கொண்டு உலகைப் புனர் நிர்மாணம் செய்யவேண்டும். சென்ற 25 வருஷங்களுக்குள் இரண்டு தடவை உலகப் பிரளயத்தை உண்டுபண்ணி, பல நூற்றாண்டுகளாகச் சேகரிக்கப் பட்ட பொக்கிஷங்களை யெல்லாம் பாதாளத்தில் கொட்டிப் பாரெங்கும் பாழாக்கிய மேனாடுகள், இந்தியாவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு விடுமோ வென்று சஞ்சலப்பட்டுச் சாகஸம் செய்ய வேண்டாம். ஒருதேசத்தின்மீது மற்றொரு தேசம் ஆதிக்கம் செலுத்தும் அட்டூழியம் நின்றாலன்றிப் பாழான உலகைப் பண்படுத்த முடியாது."

ஸ்ரீ ஆஸப் அலியின் மேற்படி அறிவுரை, பகட்டுப் பேச்சில் ஈடுபட்ட பெவினுக்குச் சரியான சூடு அல்லவா?

# புலி வந்து விட்டது!

பல நாளாகப் "புலி வருகிறது!" "புலி வருகிறது!" என்று ஆட்டம் காட்டிய பிறகு, கடைசியில் புலி நிஜமாகவே வந்து விட்டது! வராமல் பின்னே என்ன செய்யும்? வந்துதான் தீரும்.

ஸ்ரீ பிரகாசம்காருவின் மீது வந்திருக்கும் 'நம்பிக்கை யில்லை'த் தீர்மானத்தைத் தான் குறிப்பிடுகிறோம்.

மேற்படி 'நம்பிக்கை யில்லை'த் தீர்மானத்தை ஆதரிப்பதாகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சென்னைச் சட்டசபை அங்கத்தினர் 114 பேர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்களாம்.

அதோடுகூட, நம்பிக்கை யில்லைத் தீர்மானம் நிறைவேறிய பிறகு செய்ய வேண்டிய காரியங்களுக்குக் காங்கிரஸ் மேலிடத்தாரின் புத்திமதியை ஒப்புக்கொண்டு நடப்பதாகவும் அவர்கள் ஸ்வஹஸ்தகர லிகிதத்தை காட்டி யிருக்கிறார்களாம்!

மேற்படி 114 அங்கத்தினரில், சென்ற வருஷம் "கல்கி" இதழில் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட்ட 33 பேரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும், அச்சமயம் காங்கிரஸ் மேலிடத்தின் புத்திமதியை நிராகரித்துத் தங்களுடைய சுயேச்சைப் புத்தியை நிலை நாட்டியவர்கள் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

எனினும், இப்பொழுது அவர்கள் மேலிடத்து யோசனைப்படி நடப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்! அந்த வரையில் ரொம்ப விசேஷம் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் மகா சபையின் மகிமைக்கும், காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கும் இது ஒரு பெரும் வெற்றியாகும்.

காங்கிரஸ் 'மேலிடம் எனப்படுவது' உண்மையிலேயே மேலான இடந்தான் என்பதையும் இந்த 'நம்பிக்கை யில்லை'த் தீர்மானம் நிரூபிக்கிறது.

'நம்பிக்கையில்லை'த் தீர்மானத்தில் 114 பேர் கையொப்பமிட்டது மல்லாமல், அதை மேலேயுள்ள தலைவர்களிடம் நேரில் சமர்ப்பித்துவிட்டு வருவதற்காகத் தூதர்களும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் அல்லவா?

* * *

சர்தார் வல்லபாய் படேல், "சென்னை மந்திரிசபை விவகாரத்தில் நாங்கள் தலையிடப் போவதில்லை!" என்று சொன்னதாகப் பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கிறது. இதன் பொருள் என்னவென்று கண்டு பிடிப்பது அவ்வளவு எளிதல்ல.

"பேஷாக நம்பிக்கை யில்லைத் தீர்மானம் கொண்டு வாருங்கள். காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறி ஏற்பட்ட பிரகாசம் மந்திரி சபையை ஒழித்துக் கட்டுங்கள்!" என்பது அதன் பொருளா யிருக்கலாம். அல்லது "இப்போதுள்ள சென்னை சட்டசபையின் காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஒரு தடவை எங்கள் புத்திமதியைக் கேளாதபடியால் இனிமேல் அவர்கள் என்ன செய்தாலும் செய்துகொண்டு போகட்டும்; எங்கள் காதில் ஒன்றுமே போட வேண்டாம்!" என்பதும் அதன் பொருளா யிருக்கலாம். எது சரியான பொருள் என்பது சீக்கிரத்தில் தெரிந்து போகும்.

* * *

இந்த நெருக்கடியை ஸ்ரீ பிரகாசம் காரு எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பதும் இன்னும் தெரியவில்லை. எவ்வளவோ அரும் பாடு பட்டுக் கிடைத்த பிரதம மந்திரி பதவியை அவர் இலேசில் விடமாட்டார் என்றும், விடாமலிருப்பதற்குப் பல யுக்திகளைக் கையாள்வார் என்றும் சொல்லப்படுகிறது. வீண் வக்கிர வேலைகளில் புத்தியைச் செலுத்தி 'நம்பிக்கை யில்லை'த் தீர்மானம் கொண்டு வருவதை ஸ்ரீ பிரகாசம் தடை செய்ய மாட்டார் என்றும், தீர்மானம் நிறைவேறினால் உடனே அவர் தம் பதவியை ராஜிநாமா செய்து விடுவார் என்றும் எதிர்பார்க்கிறோம்.

அப்படி நடக்குமானால், 'அதாவது பிரகாசம் மந்திரிசபை கவிழ்ந்து விழுந்து ஒழியுமானல், அதற்காக இந்த மாகாணத்துப் பொதுமக்கள் ஒரு நாளும் வருத்தப்பட மாட்டார்கள்.

ஏனெனில் பிரகாசம் மந்திரி சபை, காங்கிரஸ் கட்டுப்பாட்டைக் குலைத்துக் கொண்டு ஏற்பட்ட சபை; பொது மக்கள் போற்றும் மாபெரும் தேசத் தலைவர்களின் புத்திமதியை நிராகரித்து விட்டு அமைந்த சபை.

மேற்படி மந்திரி சபை ஏற்பட்ட பிறகு இந்தப் பத்து மாதத்தில் அது செய்திருக்கும் காரியங்களோ மாகாண மெங்கும் அளவில்லாத அதிருப்தியை வளர்த்திருக்கின்றன. அது எத்தனையோ விதங்களில் அபகீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நிர்வாகத் துறையிலும் அட்வைஸரி அரசாங்கத்தின்போது இருந்ததைக் காட்டிலும் இப்போது ஊழல்கள் மலிந்திருக்கின்றன என்பது பொதுஜன வாக்கு. எங்கே பார்த்தாலும் லஞ்சப் பேயின் கோர தாண்டவம் நடைபெறுகிறது. கண்ட்ரோல்களும், பெர்மிட்டுகளும் நாடெங்கும் ஊழல்களைப் பெருக்கிப் பொதுஜனங்களிடையே சொல்ல முடியாத அருவருப்பை உண்டாக்கி யிருக்கின்றன. பொது மக்களுக்குக் காங்கிரஸ் மகா சபையினிடம் இருந்த எல்லையற்ற பக்தி இந்த மந்திரி சபையின் ஊழல்களால் வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது.

இத்தகைய நிலைமையில் பிரகாசம் மந்திரி சபை விழுந்தால், மந்திரிமார்களிடம் சொந்த முறையில் அபிமானம் உள்ளவர்களையும் அவர்களால் சுயலாபம் அடைந்தவர்களையுந் தவிர வேறு யாரும் வருத்தப்பட மாட்டார்கள்.

ஆனல், அதைக் குறித்துப் பொது மக்கள் சந்தோஷப்பட இடம் உண்டா என்று கேட்டால், அதற்கு இப்போது பதில் சொல்ல முடியாது.

இந்த மந்திரி சபைக்குப் பதிலாக எந்த மாதிரி புது மந்திரி சபை ஏற்படுகிறது என்று பார்த்த பிறகுதான் சந்தோஷப்பட இடமுண்டா என்று தீர்மானிக்கலாம்.

பெருமாளுக்குப் பதிலாகப் பெத்த பெருமாள் வந்து சேராமல், உண்மையிலேயே முற்றும் மாறான நல்ல பெருமாள் வந்தால் எல்லாரும் சந்தோஷ மடையலாம். அப்படி வரும் நல்ல பெருமாள் காரியத் திறமை வாய்ந்த பெருமாளாகவும் இருக்கவேண்டும்.

* * *

இப்போதுள்ள சட்ட சபையையே அடியோடு கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தி முற்றும் புதியதான சட்டசபை ஏற்பட்டால்தான் இந்த மாகாணத்துக்குக் கதிமோட்சம் உண்டு என்று தமிழ்நாடெங்கும் பல உண்மைக் காங்கிரஸ் தொண்டர்கள் கருதுகிறார்கள்.

ஏனெனில், இப்போதுள்ள சட்ட சபையின் பெரும்பாலான காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் ஒரு தடவை மேலிடத்து யோசனையை நிராகரித்துக் காங்கிரஸின் கட்டுப் பாட்டையும் கௌரவத்தையும் குலைத்தவர்கள். வேறு பலவிதங்களிலும் நிர்வாக ஊழல்களின் ருசி கண்டவர்கள். ஆகவே இந்தச் சட்ட சபையே அடியோடு மாறவேண்டுமென்று காங்கிரஸ் ஊழியர்களிலும் பொது மக்களிலும் பலர் எண்ணுகிறார்கள். இந்த அபிப்பிராயத்தைப் பொதுக் கூட்டங்களிலும் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆயினும் இது விஷயத்தில் கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்பது அவசியமாகும்.

காங்கிரஸ் பிரதம மந்திரியின் பேரில் காங்கிரஸ் கட்சியால் 'நம்பிக்கை யில்லை'த் தீர்மானம் கொண்டுவரப்படும் மகா பெரிய கௌரவம், முதன் முதலில் நமது சென்னை மாகாணத்துக்குத்தான் கிடைத்திருக்கிறது!

இப்போதைக்கு இந்த மகா பெரிய கௌரவமே நமக்குப் போதும் அல்லவா?

சட்ட சபையையே கலைத்து விட்டு மறு தேர்தல் நடத்தும் தனிப் பெரும் கௌரவமும் சேர்ந்தாற்போல் வந்தால், சென்னை மாகாணத்தினால் அதைத் தாங்க முடியுமா?

ஆகவே கொஞ்சம் பொறுத்திருந்து, 'நம்பிக்கை யில்லை'த் தீர்மானத்தின் கதி என்ன ஆகிறது என்றும், அது நிறைவேறினால் பிறகு புதிய மந்திரி சபை எப்படி அமைகிறது என்றும் கவனிக்கலாம்.

மேலிடத்துத் தலைவர்களின் யோசனையின் பேரிலும் அவர்களுடைய பூர்ண ஆசியுடனும் புதிய மந்திரி சபை அமைந்து அது நல்ல முறையில் வேலையும் செய்யுமானல், சென்னைச் சட்ட சபைக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தி ஒரு வேளை நாளடைவில் மறைந்து விடலா மல்லவா?




நீங்கள் இன்று மக்லீன்ஸால் பல் துலக்கி னீர்களா?



துலக்கினேன்.
நியாய யுக்தமான
வழி அதுதான்.




எல்லா கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்

Copyright JWT(E)LTD.



★ மாருதி ★

ஆசிரியர்: காந்தி ஜோசியர்
திருத்தணி

★

மாசி இதழில் சில விஷயங்கள்

★

(1) வியாபார உலகம்: மிளகு, மிளகாய், பஞ்சு, நெய், மஞ்சள், காப்பிக்கொட்டை, மணிலாப் பயர், தானியவகை, பாக்கு மற்றும் முக்கிய வஸ்துக்களின் நிலைமை விலை ஏற்றத தாழ்வு விவரம்.

(2) அரசியல் நிர்ணய சபை வெற்றி பெறுமா?: ஜாதக ரீதியாக ஆராய்ச்சி.

(3) உங்கள் நக்ஷத்திர பலன்: பிரதி நபருக்கும் கால பலனை நன்கு தெரிவிக்கிறது.

(4) தினசரிக் குறிப்புகள்: ஆண்டி முதல் அரசன் வரை வாழ்க்கையை நடத்த உதவும். சுபா சுப கால விவரம்.

தனிப்பிரதி 0—2—0

★

ஹிக்கிம்பாதம்ஸ்,
சுதேசமித்திரன்
புஸ்தகசாலை
மற்றும் எல்லா நியூஸ் ஏஜண்டுகளிடமும்
பிரதி தமிழ் மாத ஆரம்பத்தில் கிடைக்கும்

★

மானேஜர்:
மாருதி ஆபீஸ்,
திருத்தணி, தென்னிந்தியா




# அக்கப் போர்

"சக்கைப்போடு"

இலக்கங்களுக்குள் 13 என்கிற இலக்கம் துரதிர்ஷ்டமானது என்ற நம்பிக்கை ஒரு சிலருக்கு இருந்து வருகிறது. இந்தக் குருட்டு நம்பிக்கையில் ஒருவேளை ஏதேனும் உண்மை யிருக்குமோ என்கிற எண்ணம் இப்போது பலருக்கு உண்டாகி யிருக்கிறது.

முதலில் பதின்மூன்ருவது மந்திரியாக நியமிக்கப்பட்ட ஸ்ரீ பிக்கினி வீராசாமி மந்திரி பதவியை ஒப்புக் கொண்டதும் ஆஸ்பத்திரிக்குப் போகும்படி நேர்ந்தது. அந்தப் புண்ணியவான் மந்திரி பதவியை ராஜிநாமா செய்த மறுநாளே ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வந்து விட்டார்.

அவருடைய ஸ்தானத்தில் இன்னொருவர் பதின்மூன்ருவது மந்திரியாக வந்தார். அவர் வந்தவுடனே மந்திரி சபைக்கே தலையை வலிக்க ஆரம்பித்திருக்கிறது!

★

ஸ்ரீ பிரகாசம்காருவிடம் "நம்பிக்கையில்லை" என்று 114 எம். எல். ஏ.க்கள் கையெழுத்திட்டுப் புது டில்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள் அல்லவா?

புது டில்லியிலுள்ள தலைவர்கள் இதைப் பற்றி ஸ்ரீ பிரகாசம்காருவைக் கேட்டால், "அதனால் என்ன? என்னிடம் 'நம்பிக்கை உண்டு' என்பதாக ஒரு கோடி சோச்சம் கையெழுத்து வாங்கித் தருகிறேன்!" என்று அவர் சவால் விடக்கூடும்!

மந்திரி கோடி ரெட்டியாரும், மற்றுமுள்ள மந்திரிகளும் பார்லிமெண்டரி காரியதரிசிகளும் கையெழுத்துப் போட்டால் ஒரு கோடி சோச்சம் கையெழுத்து ஆகிவிடுமல்லவா?

★

ஸ்ரீ பிரகாசம்காரு பிரதம மந்திரியாவதற்குச் சில மாதங்களுக்கு முன்னால் மயிலாப்பூர் ரானடே ஹாலில் நடந்த பொதுக் கூட்டத்தில் அரசியல் நிலைமையைப் பற்றி அவர் பேசினார்.

ஸ்ரீ பிரகாசம் பேசும்போது அடிக்கடி ஏதாவது ஒரு கேள்வியைக் கேட்டு விட்டுச் சற்று நேரம் சும்மா நிற்பது வழக்கம். அது போலவே, "நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?" என்று கேட்டுவிட்டுச் சும்மா நின்றார். ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நிமிஷம் ஆகியும் மேற்படி கேள்விக்கு அவர் பதில் சொல்லுகிற வழியாயில்லை. எனவே, கூட்டத்திலிருந்த விஷமி ஒருவர், "ரானடே ஹாலில் இருக்கிறோம்!" என்று இரைந்து சொல்லி வைத்தார்.

ஸ்ரீ பிரகாசம்காரு பதில் வந்த இடத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "ஆம்; ரானடே ஹாலில் இருக்கிறோம். அது எனக்குத் தெரியும். ஆனால் ரானடே ஹாலில் எங்கே இருக்கிறோம்?" என்று கேட்டார். அதற்கு யாரும் பதில் சொல்லாமல் போகவே, அத்துடன் கூட்டம் கலைந்தது!

★

பிரகாசம் மந்திரி சபையார் ஆலை ஒழிப்பு, தொழிற்சாலை ஒழிப்பு, அரிசி மில் ஒழிப்பு முதலிய பல ஒழிப்புத் திட்டங்களோடு ஜமீன்தாரி ஒழிப்புத் திட்டத்தையும் ஆரம்பித்திருக்கிறார்கள் அல்லவா?

கடைசி ஒழிப்புத் திட்டத்தைத் தீவிரமாக ஆதரிக்கும் ஆசாமி ஒருவர், "இந்த ஜமீன்தார்கள் ஜமீன் பாத்தியதை கோருவதற்கு என்னத்தைச் செய்தார்கள்?" என்று ஆத்திரமாய்க் கேட்கிறார்.

"மாட்சிமை பொருந்திய ஆரும் ஜார்ஜ் சக்கரவர்த்தி என்ன, மேன்மை தங்கிய மைசூர் மகாராஜா என்ன, ஹைதராபாத் நைஜாம் என்ன, திருவாங்கூர் மன்னர் என்ன, மற்றும் பல முதலாளிகள் மிராசுதார்கள் என்ன, இவர்கள் எல்லோரும் செய்ததைத்தான் நாங்களும் செய்தோம். அதாவது எங்கள் பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்தோம்!" என்று ஒரு ஜமீன்தார் மேற்படி கேள்விக்குப் பதில் சொல்லுகிறார்.

★

மேனாட்டில் நூறு வயது வரையில் உயிரோடிருந்த ஒரு மாபெருங் கிழவரிடம் பத்திரிகை நிருபர்கள் கூட்டமாக வந்து, "நீங்கள் நூறு வயது வாழ்ந்திருப்பதின் காரணம் என்ன? மதுபானம் செய்யாதிருந்தீர்களா? சுருட்டுக் குடிக்காமலிருந்தீர்களா? காலால் நடக்காமலிருந்தீர்

களா? மூச்சு விடாம லிருந்தீர்களா? மருந்து சாப்பிடாம லிருந்தீர்களா?" என்றெல்லாம் கேட்டார்களாம்.

அதற்கு அந்தக் கிழவர், "கனவான்களே! நான் நூறு வயது வாழ்ந்திருப்பதற்குக் காரணம் நீங்கள் சொன்னதெல்லாம் அல்ல. உண்மையான காரணத்தை இதோ சொல்லி விடுகிறேன். 1847 ம் வருஷத்தில நான் பிறந்ததுதான் காரணம்! அதனுல்தான் நாளது 1947ம் வருஷத்தில் எனக்கு 100 வயது ஆகியிருக்கிறது" என்ருராம்!

★

"பெண்களின் சொத்துரிமை மசோதா" சென்னைச் சட்டசபையில் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகிறது.

இதைப் பற்றிக் கேள்விப்பட்ட ஒரு தஞ்சாவூர் மிராசுதார், "அடுத்தபடியாக ஆண்களின் சொத்துரிமை விஷயத்தையும் சென்னைச் சட்டசபை கொஞ்சம் கவனிக்குமா?" என்று பிரலாபிக்கிருர்.

தற்சமயம் ஆண்களின் சொத்துரிமையில் ஒரு பாதியைப் பிரகாசம் சர்க்காரும், மற்ருெரு பாதியைக் கம்யூனிஸ்டுகளும் அபகரித்துக் கொண்டு விட்டார்கள் என்று மேற்படி தஞ்சாவூர் மிராசுதார் சத்தியம் செய்கிருர்!

★

சென்னைச் சட்டசபையில் கொண்டு வரப்பட் டிருக்கும் இன்னெரு மசோதா, ஆண் மக்கள் ஒரு தாரத்துக்கு மேல் கலியாணம் செய்து கொள்வதைத் தடை செய்யும் மசோதாவாகும்.

இதை நமது அருமை நண்பரும் தலைசிறந்த தேசபக்தருமான ஸ்ரீ அண்ணுமலைப் பிள்ளை எம். எல். ஏ. அவர்கள் எதிர்த்துப் பேசியதாகப் பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

ஸ்ரீ அண்ணுமலைப் பிள்ளை எந்தவிதச் சொந்தக் காரணத்தை முன்னிட்டும் மேற்படி மசோதாவை எதிர்த்திருக்க முடியாது.

நமது திருக்கோயில்களில் நடக்கும் திருக்கலியாண மகோத்ஸவங்களைப் பற்றி ஒருவேளை ஸ்ரீ அண்ணுமலைப் பிள்ளை கவலை கொண்டிருக்கலாம்!

மகாவிஷ்ணுவின் பத்தினிகளான ஸ்ரீதேவி பூதேவிமார்களும், ஸ்ரீ சுப்பிரமணியரின் மனைவியான வள்ளி தேவயானைகளும் மேற்படி மசோதாவினுல் பாதிக்கப்படுவார்களோ என்று அவர் ஒருவேளை பயந்திருக்கலாம்.

கிருதயுகத்தில் நடந்த கலியாணங்களைக் கலியுகத்தில் ஏற்படும் சட்டங்கள் பாதிக்க முடியாது என்று ஸ்ரீ அண்ணுமலைப் பிள்ளைக்கு உறுதி கூறுகிறேும்.

★

பள்ளிக் கூடங்கள் காலேஜுகள், ஆஸ்பத்திரிகள் முதலியவற்றைக் குறைந்த செலவில் கட்டுவதற்குப் பிளான்கள் தயாரிப்பதற்காகச் சென்னை சர்க்கார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிருர்கள். இந்தக் கமிட்டியில் ஒரு ராவ்பகதூர் ஸுபரின்டெண்டிங் என்ஜினீயரும், ஒரு உதவிக் கட்டிட நிபுணரும், ஒரு டவுன் பிளானிங் நிபுணரும், ஒரு மாஜி சானிடரி என்ஜினீயரும். ஒரு கட்டிட கண்டிராக்டரும் இருக்கிருர்கள்.

இவ்வளவு பேருமாகச் சேர்ந்து பிளான் போட்டுக் கட்டும் கட்டிடங்கள், சர்க்கார் கட்டிடங்களின் நெடுநாள் மாமூலை அனுசரித்து, உள்ளே விடும் தண்ணீர் வெளியே போக வழியில்லாமலும், வெளியே மழை பெய்தால் உள்ளே தாராளமாக வரும்படியாகவும், சுவர்களில் பிளவுகளும் கூரையில் ஓட்டைகளும் கூடிய சீக்கிரம் ஏற்படும்படி யாகவும் கட்டப்படுமென்று எதிர்பார்க்கிறேும்.

இது சம்பந்தமாக மயிலாப்பூரில் பிரசித்தி பெற்ற ஜோசியர் ஒருவர் சொன்ன விஷயம் ஞாபகம் வருகிறது.

மழை காலத்தில் அவருடைய வீட்டுக்குள்ளே தண்ணீர் தாராளமாகப் புகுந்து தேங்கிவிட்டதாம். ஒரு என்ஜினியரை அழைத்து வந்து காட்டி, "இதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டாராம்.

என்ஜினியர் அங்கு மிங்கும் சென்று பார்த்து வெகு நேரம் யோசனை செய்த பிறகு, "கண்டு பிடித்து விட்டேன்! இந்த வீடு கீழ் 'லெவ'லில் இருக்கிறது. வெளியில் உள்ள ரோடு மேல் 'லெவ'லில் இருக்கிறது. அதனுல்தான் வீட்டுக்குள் தண்ணீர் புகுந்து தங்குகிறது!" என்ருராம்.

"இந்த அபூர்வ விஷயம் எனக்கே தெரியுமே? இதைக் கண்டு பிடித்துச் சொல்ல என்ஜினியர் வேண்டுமா?" என்று கூறி விட்டு ஜோசியர் சிரிக்க ஆரம்பித்தவர், விடாமல் மூன்று நாள் வரையில் சிரித்தாராம். அதற்குள் வீடும் உலர்ந்து போய் விட்டதாம்!









ஆண்ட்ருஸ் அருந்தி உட்புறத்தை சுத்தி செய்வது ஆரோக்கியத்திற்கான முதல் விதி என்பதை ஜனங்கள் இப்போது அதிகமாக தெரிந்து கொண்டு வருகிருர்கள். வெளிச் சுத்தத்தைப்போல், உட்புற சுத்தமும் உடலுக்குத் தேவையானது என்பதும் இயற்கையிலே ஏற்பட்டது. ஆண்ட்ருஸ் அருந்தி உடலின் உட்புற சுத்தம் செய்வது பரிபூரண திருப்தி அளிக்க வல்லது. ஒரு டம்ளர் பொங்கும் ஆண்ட்ருஸ், ஒரு இன்றியமையாத மலமிளக்கியாக இருப்பதோடு மட்டுமில்லாமல் உடலின் உட்புறமனைத்தும் கச்சிதமாக சுத்தம் செய்து விடுகிறது. மலச் சிக்கல், வயிற்று உப்புசம் முதலியவை போன்ற தினசரி அவதிகளுக்குக் காரணமான வயிற்றிலுள்ள விஷ மண்டுக்களை துப்புறவாக அப்புறப்படுத்துகிறது. ஆண்ட்ருஸை அன்ருடம் அருந்தி இனிது இன்புறறிருங்கள்—குளிர்ச்சி தந்து களைப்பாற்றி, வீரியமளிப்பதை அப்போது காணுங்கள்—மானுஷ்யத்தின் அபார சக்திகளை அளிக்கிறது. மெதுவாகவும கச்சிதமாகவும் உடலை உறுதிப்படுத்தும். ஆண்ட்ருஸின் வேலைகளைக் கவனியுங்கள்:

முதலில்: ஆண்ட்ருஸ் வாயையும் நாக்கையும் சுத்தப்படுத்தி கச்சிதமாக்குகிறது.

அடுத்தபடி: ஆண்ட்ருஸ் வயிற்றை சரிபடுத்தி புளிப்பு நீரை திருத்துகிறது.

பிறகு: ஆண்ட்ருஸ் ஈரலை நேர்மையாக்கி உப்புசத்தைப் போக்குகிறது.

கடைசியாக: உட்புற சுத்தத்தை செய்து முடிக்க, ஆண்ட்ருஸ் மெதுவாக வயிற்றை சுத்திகரிக்கிறது. அது அவதிப்படுதலும் விஷங்களை அப்புறப்படுத்தி மலச் சிக்கலைப் போக்கி ரத்தத்தை குணப்படுத்தி குளிர்ச்சியாக்குகிறது.

"டின்களிலும் கார்டன்களிலும் பாக் செய்யப்பட்டு எங்கும் புது ஸ்டாக்குகள் இருக்கின்றன."

ANDREWS

ஆண்ட்ருஸ் லிவர் ஸால்ட்

குளிர்ச்சியூட்டுகிறது—களைப்பாற்றுகிறது—ஊக்கமூட்டுகிறது

108

# நவகாளி யாத்திரை






★ உலகமெல்லாம் கண்டு அதிசயிக்கும்படியும், நல்லோர் எல்லாரும் மகிழும்படியும், தீயவர்கள் வெறுத்துப் புழுங்கும்படியும், காந்தி மகாத்மா கீழ் வங்காளத்தில் அஹிம்சா யாத்திரை செய்து வருகிறார். அந்த அபூர்வ யாத்திரையை நேரில் பார்த்து எழுத்துப் படமும், புகைப் படமும் பிடித்துக் கொண்டு வருவதற்காக நமது உதவி ஆசிரியர் 'சாவி'யும், புகைப்படக் கலைஞர் ஸ்ரீ கே. நடராஜனும் சென்றிருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த இருவகைப் படங்களையும் கீழே காணலாம்.

## பூர்வாங்க ஏற்பாடுகள்

ஒரு நாள் மாலை நான் தியாகராஜ நகர் பனகல் பார்க்கைச் சுற்றிச் சுற்றி வேகமாக நடை போட்டுக் கொண்டிருந்தேன்.

என்னைக் கவனித்த நண்பர்கள் சிலர் என் அருகில் வந்தார்கள். நான் அவர்களைப் பார்க்காதவன் போல் இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தேன். நண்பர்கள் என்னைப் பின் தொடர ஆரம்பித்தார்கள். நான் மேலும் வேகமாக நடந்து சென்றேன். நண்பர்கள் விடுவதா யில்லை.

"ஸார், ஸார்!" என்றார்கள். திரும்பிப் பார்த்தேன்.

"நேற்றுவரை நன்றா யிருந்தீர்களே? இன்றைக்குத் தங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது?" என்று அவர்கள் என்னைப் பார்த்து துக்கம் விசாரிக்கத் தொடங்கினார்கள்.

"என்னை ஏகாந்தமாகச் செல்ல விடுங்கள். என் பின்னோடு யாரும் வந்து தொந்தரவு கொடுக்க வேண்டாம்! நான் நவகாளி ஜில்லாவுக்குப் போகப் போகிறேன். அதற்காகவே இப்படிச் சாதகம் செய்து கொள்கிறேன்!" என்றேன்.

"என்ன? நவகாளிக்கா போகிறாய்? கால் நடையாகவா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் ஒரு நண்பர்.

"இல்லை ஐயா, இல்லை; நவகாளிக்கு ரயிலில்தான் செல்கிறேன், ஆனால்......" என்றேன்.

"நல்ல வேளை; நீ நடந்து பழகும் வேகத்தைப் பார்த்தால் ஒரு வேளை நவகாளிக்கே நடந்து போய் விடுவாயோ என்று பயந்து போனேன். அது சரி; நவகாளியில் உனக்கு என்ன வேலை?" என்றார் நண்பர்.

"அங்கே மகாத்மாஜி தமது அஹிம்சாப் பிரசாரத்தின் மூலம் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காகக் கிராமம் கிராமமாகக் கால் நடையாகவே யாத்திரை கிளம்பி யிருக்கிறாரல்லவா?"

"ஆமாம்!"

"காந்தியடிகளின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி அடியேனும் செல்லப்போகிறேன். மகாத்மாஜி ரொம்பவும் வேகமாக நடப்பவராகையால் அவருடன் பிரயாணம் செய்யும் பொருட்டே இம்மாதிரி வேகமாக நடந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறேன்!" என்றேன்.



என்னைத் தொடர்ந்து வந்த நண்பர்களும் அத்துடன் திருப்தி யடைந்தவர்களாகி வேறு திசையில் தங்கள் நடையைக் கட்டினார்கள்.

## பிரயாணத் திட்டம்

காந்தி மகாத்மாவோடு பிரயாணம் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை எல்லாம் முடித்துக் கொண்டு மறுநாள் ரயில் ஏறிக் கல்கத்தாவை அடைந்தேன்.

கல்கத்தாவில் தென்னிந்தியப் பிரமுகரான ஸ்ரீ சாரியார் வீட்டில் தங்கி, அங்கிருந்து நவகாளி மார்க்கத்தைக் கண்டு பிடித்து, காந்திஜி தங்கியுள்ள கிராமத்துக்குச் செல்லும் வழி முதலிய விவரங்களை அறிவதற்குள் இரண்டு தினங்கள் கழிந்து விட்டன. இதற்குள் மகாத்மாவின் முதல் யாத்திரைத் திட்டம் பூர்த்தியடைந்து விட்டதாகவும், பிப்ரவரி 5உ மறுபடியும் இரண்டாவது பிரயாணத் திட்டம் தொடங்கப் போகிறதென்றும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகி யிருந்தது. மேற்படி இரண்டாம் யாத்திரையின் திட்டப்படி காந்தி மகான் முதலாவதாக ஸ்ரீநகர் கிராமத்துக்கு விஜயம் செய்வார் என்றும் கண்டிருந்தது.

மேற்படி கிராமத்தை அடைவது எப்படி என்று ஸ்ரீ சாரியார் அவர்களை விசாரித்தேன். ஸ்ரீ சாரியார் தம்முடைய கைகளை அகல விரித்து விட்டு "எனக்குத் தெரியாதே!" என்றார். அப்போது என் முகத்திலே தோன்றிய பலவித பாவங்களை அவர் கவனித்திருக்க வேண்டும். சிறிது நேரத்துக்கெல்லாம் என் நிலைமையைக் கண்டு இரக்கப்பட்டவராய், "கவலைப் படாதீர்; பக்கத்து வீட்டில் ஒரு வங்காளி நண்பர் இருக்கிறார். அவருக்குச் சொந்த ஊர் நவகாளி ஜில்லாதான். அவர் அடிக்கடி அங்கே போய் வந்து கொண்டிருக்கிறார். அவரை விசாரித்தால் எல்லா விவரங்களும் சொல்லுவார்" என்று தைரிய மூட்டி, அந்த வங்காளி நண்பரிடம் அழைத்துப் போனார்.

எங்களைக் கண்டதும் மேற்படி வங்காளி நண்பர் "ஆஷன் — போஷன்" என்று வங்காளியில் பேசினார். "வாருங்கள் — உட்காருங்கள்" என்பதற்குத்தான் வங்காளி பாஷையில் 'ஆஷன் — போஷன்' என்று சொல்லுவார்கள் என்று சாரி எனக்கு விளக்கம் கூறினார்.

பிறகு, "இவர் மதராஸி; நவகாளியில் காந்திஜியைப் பார்க்கச் செல்கிறார். இந்தப் பக்கத்துக்குப் புதியவர். தங்களிடம் நவகாளிக்குப் போகும் வழியைக் கேட்டுத் தெரிந்து கொண்டுபோக வந்திருக்கிறார்" என்று என்னை அறிமுகப் படுத்தினார்.

மகாத்மாஜி பேரைச் சொன்னதும் மேற்படி வங்காளி நண்பர் என்னைச் சற்று அதிசயத்துடன் பார்த்துவிட்டு வழி சொல்லலானார்:—

"கல்கத்தாவிலிருந்து கோலந்தோவுக்கு ரயில் ஏறிப் போகவேண்டும். கோலந்தோவில் தயாராக நிற்கும் நீராவிப்படகில் ஏறி மக்னு, பத்மா என்ற இரு நதிகளையும்

கடந்து சாந்த்பூருக்குச் செல்லவேண்டும். சாந்த்பூரை அடைந்ததும் சிட்டகாங் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறினால் லக்ஸாம் என்ற ஜங்ஷன் வரும். அங்கிருந்து நவகாளி எக்ஸ்பிரஸ் கிளம்பும். அதில்ஏறிக் கொண்டு ஸோணய்முரி ஸ்டேஷனில் போய் இறங்கி னீர்களானால் அப்புறம்......"

"அப்புறம் என்ன?......அப்புறமாவது மகாத்மாஜியைப்பார்த்துவிடலாமல்லவா?" என்று குறுக்கிட்டுக் கேட்டேன்.

"அதுதானே இல்லை; ஸோணய்முரிக் குப் போய் அங்கே யாரையாவது விசாரித் தீர்களானால் மகாத்மாஜி இருக்கும் இடத் துக்கு வழி சொல்லுவார்கள்" என்று சொல்லி முடித்தார்.

"நாசமற்றுப் போச்சு!" என்று பெரு மூச்சு விட்டேன்.

கல்கத்தாவிலிருந்து நான் மகாத்மா இருக்குமிடத்தை அடைவதற்குள் அவ ருடைய இரண்டாவது பிரயாணத் திட்ட மும் முடிந்துவிடுமோ என்று சந்தேகம் வந்து விட்டது.

ஸ்ரீ சாரியார் "என்ன, கிளம்புவதற்குத் தயாரா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

"ஓ! தயார்! மெட்ராஸ் எக்ஸ்பிரஸ் எப்போது புறப்படுகிறது?" என்றேன்.

ஆமாம்; வங்காளி நண்பர் வழி சொன்ன பிறகு என்னுடைய மனோநிலை அப்படித் தான் இருந்தது. ஆனாலும் முன் வைத்த காலைப் பின் வைப்பது அழகல்ல என்ற திட சங்கல்பத்துடன் நவகாளியை அடைந்தே தீருவது என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

எனவே, நவகாளி யாத்திரைக்கான என் னுடைய இரண்டாவது பிரயாணத் திட்டத் தைப் போட்டுக்கொண்டு மறுநாள் விடியற் காலம் புறப்படுவதற்குச் சித்தமானேன்.

## ஸ்ரீ சாரியார் கவலை!

முதல் நாள் இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. போதாக்குறைக்கு நண்பர் சாரியார் மூச்சுக்கொரு தடவை வந்து என்னைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

"என் ஸார், அங்கெல்லாம் ரொம்பக் குளி ரும் என்கிறார்களே, என்ன செய்வீர்?"

"குளிருமா? அப்படியானால் இதோ இந்தக் கம்பளிக் கோட்டைப் போட்டுக் கொள்வேன்" என்றேன்.

சற்று நேரம் கழித்து சாரியார் இன் னொரு தடவை வந்தார்.

"ஸார்! தங்களுக்கு வங்காளி பாஷை தெரியாதே, என்ன செய்வீர்?"

"பரவாயில்லை; மகாத்மாஜிக்கும் வங்காளி பாஷை தெரியாதாம். ஆகையால் கவலையில்லை" என்றேன்.

சிறிது நேரம் கழித்து அவர் மறுபடியும் வந்தார்.

"என் ஸார், அங்கெல்லாம் அடிக்கடி பசிக்குமாமே? அதற்கு என்ன செய் வீர்?" என்று கேட்டார்.

"அங்குமட்டு மென்ன? எனக்கு எங் குமே அடிக்கடி பசி எடுக்கும். ஆகையால் அடிக்கடி பசி எடுத்தால் அடிக்கடி சாப் பிட்டு விடுகிறேன்" என்றேன்.

ஸ்ரீமான் சாரியார், பாவம், நான் தனி யாகப் போகிறேனே என்ற கவலையால் அடிக்கடி இப்படி ஏதாவது கேள்விகள் கேட்டுக் கேட்டுத் தானாகவே அலுத்துப் போய்க் கடைசியாக, "ஏதோ, ஸார்; தனி யாகப் போகிறீர்கள்; ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள். வாயுள்ள பிள்ளை பிழைக்கும்" என்று எச்சரித்து விட்டுப் படுக்கப் போய் விட்டார்.

* * *

மறு நாள் நான் கிளம்பியபோது, அவருடைய மனைவியார் என் வழிப் பிரயாணத்துக்காகச் சாப்பாடு கட்டிக் கொடுத்ததுடன் சில தினங்கள் வைத்துச் சாப்பிடக் கூடிய ஆகாரமான பொரி உருண்டைகளும் செய்து தந்தார்.

நான் வாயுள்ள பிள்ளையாகையால் சாப் பாடு, பொரி உருண்டை முதலியவைகளை மறுநாளே தீர்த்துக் கட்டி விட்டேன்!

பின்னர், எனக்குத் தெரிந்த அரைகுறை ஹிந்தி பாஷையை வைத்துக் கொண்டு ரயில் ஏறி, கப்பல் ஏறி, மூங்கில் படகு ஏறி, மோட்டார் ஏறி, மாட்டு வண்டி ஏறிக் கடைசியில் ஒருவிதமாக ஸோணய்முரி என்ற கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

மேற்படி கிராமத்திலிருந்து மகாத்மாஜி இருக்கு மிடத்துக்குப் பத்து மைல் தூரம் என்றும் அந்த இடத்துக்கு வண்டிப் பாதை கிடையாதென்றும் நடை பாதை தான் உண்டு என்றும் தெரிந்து கொண் டேன். எனவே தன்னந் தனியாக நவ காளி ஜில்லாவில் தோப்புகளும் தாவு களும் நிறைந்த பயங்கர சூழ்நிலையில் களி மண் வரப்புக்களால் அமைந்த கொடி வழி யைப் பின்பற்றி மகாத்மாஜி இருக்கும் திக்கு நோக்கி ஏகாந்தமாக நடந்து சென்றேன்.

## திக்குச்சி. சம்பவம்!

போகும் வழியில் என்னை யறியாமல் என் உள்ளத்தில் பீதி குடிகொண்டது. சில மாதங்களுக்கு முன்னால் அந்தப் பிரதேசத் தில் நடந்த பயங்கரப் படுகொலைகளும், மிருகப் பிராயமான நாசவேலைகளும் ஞாப கத்துக்கு வந்தன. அங்கங்கே தூரத்தில் எரிந்து சாம்பலான கொள்ளிக் கட்டைகளு டன் காட்சியளித்த சில குடிசைகள் வேறு மேற்படி சம்பவங்களுக் கெல்லாம் சாட் சியம் கூறின. மனித சஞ்சாரம் அவ்வள வாகக் காணப்படவில்லை. வெகு நேரம் கழித்து, வெகு தூரம் சென்றதும் எதிரே ஒரு ஆஜானுபாகுவான முரட்டு மனிதன்

சென்ற 4—2—'47 அன்று மகாத்மாஜி ஸாதுர்கில் என்ற கிராமத்தில் தங்கினர். அன்று மாலை அங்கே நடந்த பிரார்த்தனைக் காட்சியின் ஒரு தோற்றம்.





தென்பட்டான். அவன் கையிலே அரிவாள் ஒன்று இருந்தது. அவனைக் கண்டதும் என்னுடைய இருதயம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. அவன் என்னை நெருங்கி வர வர வேகம் அதிகமாயிற்று. அவன் என் எதிரிலே வந்து யமனைப்போல் நின்று கொண்டான். "நீ என்ன ஹிந்துவா? அல்லது முஸ்லிமா?" என்று வங்காளி பாஷையில் கேட்டான். நான் நடுங்கிய குரலில் அந்த ஆசாமிக்குப் பதில் கூறினேன். "நான் ஒரு இந்தியன்; காந்திஜியைப் பார்க்கச் செல்லுகிறேன்" என்று சொல்லிக் கையிலே பிடித்திருந்த 'கல்கி' பத்திரிகையின் அட்டையின்மேல் வரைந்திருந்த காந்திஜியின் படத்தை அவனுக்குக் காண்பித்து என்னுடைய பாஷைக்குச் 'சமிக்ஞை' தெரிவித்தேன். அந்தப் படத்தைக் கண்டதும் மேற்படி வங்காளி முஸ்லிமின் முகத்தில் பிரகாசம் தோன்றியது.

"உன்னிடம் நெருப்புக் குச்சி இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே தன்னுடைய சட்டைப் பையிலிருந்த பீடித் துண்டைக் கையிலே எடுத்துப் பிடித்துக் கொண்டான்.

நல்ல வேளையாக அப்போது என்னிடம் தீப்பெட்டிகள் இருந்தன. போகுமிடத்தில் எப்படியிருக்குமோ, என்னமோ என்று சில தீப்பெட்டிகள் வாங்கி வைத்திருந்தேன். அவற்றிலிருந்து முழுப் பெட்டியாக ஒன்றைச் சட்டென்று எடுத்து அவனிடம் கொடுத்தேன். அதற்குப் பிறகுதான் அவன் என்னை மேலே போக வழிவிட்டான்.

"அப்பாடா!" என்று பெருமூச்சுடன் ஆண்டவனுக்கு ஒரு சலாம் போட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு வேகமாக நடக்க ஆரம்பித்தேன். அவன் ஒரு சாதாரண முஸ்லிம் குடியானவன்தான் என்றும் அரிவாளுடன் வயலுக்குப் போகும் வழியில் என்னைச் சந்தித்த இடத்தில் இயற்கையாக அவன் பாட்டுக்கு "ஹிந்துவா, முஸ்லிமா?" என்று கேள்வி போட்டிருக்கிறான் என்றும், வீணான பீதி காரணமாக நானே அவனைக் கண்டு பயந்து போயிருக்கிறேன் என்றும் பின்னால் ஊகித்துக் கொண்டேன்.

"அச்சா குத்தா" காந்திஜியுடன் புறப்படத் தயாராக நிற்கிறது.



## கண்டேன் காந்தியை!

அப்புறம் எப்படியோ தட்டுத் தடுமாறி ஸ்ரீநகர் கிராமத்தை அடைவதற்குள் மணி மூன்றாகி விட்டது. காந்திஜியின் ஆசிரமம் ஒரு தென்னந் தோப்புக்குள் இருந்தது. குளுமையான மேற்படி தோப்புக்குள் பிரவேசித்த போது என் பசி தாகமெல்லாம் பறந்து போய் விட்டன. என்னையறியாமல் என்னிடம் ஒருவித பக்தி உணர்ச்சி தோன்றியது. ஏதோ தெய்விக சக்தி வாய்ந்த ஒரு திவ்ய ஆலயத்தின் கர்ப்பக் கிரகத்துக்குள் நுழைவதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அங்கே காணப்பட்ட ஒரு சிறு செங்கல் வீட்டுக்குள்தான் மகாத்மா இருக்கிறார் என்று சொன்னார்கள். எனவே மேற்படி வீட்டை வலமாக ஒரு தடவை பிரதட்சணம் வந்து வாசற்படி வழியாகச் சந்நிதானத்தின் மூல விக்ரகத்தை எட்டிப் பார்த்தேன். அஹிம்சா மூர்த்தி அயர்ந்து நித்திரையிலாழ்ந்திருந்தார். சாந்த ஸ்வரூபியின் முகத்திலே அறவொளியின் தேஜஸ் பிரதிபலித்தது. அவருக்குப் பக்கத்திலே கைக் கோலும் கைராட்டையும் காணப்பட்டன.

ஆகா! மகாத்மாவைப் பார்த்த மாத்திரத்திலே என்னுடைய கஷ்டங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தன.

மகாத்மாஜியின் தரிசனம் கிட்டியதே என் பாக்கியம் என்று பூரிப்படைந்தவனாய் அந்த இடத்தைவிட்டு அப்பால் சென்றேன்.

பத்திரிகை நிருபர்களுக்காக மகாத்மாஜியின் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு குடிசையை ஒதுக்கிவிட்டிருந்தார்கள். இன்னொரு குடிசையில் வங்கப் போலீஸார் தங்கியிருந்தார்கள். மற்றொரு குடிசையில் வங்காள யுனிவர்ஸிடி புரொபஸர் ஸ்ரீ நிர்மல் குமார் போஸ் சுறுசுறுப்பாகத் தமது காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். நிர்மல் குமார் போஸ்தான் தற்போது மகாத்மாஜியின் ஆபீஸ் அலுவல்களைக் கவனித்துக் கொள்கிறார். அத்துடன் மகாத்மாஜியின் பிரார்த்தனைப் பிரசங்கங்களை வங்காளியில் மொழிபெயர்த்துக் கூறுவதும் இவருடைய அன்றாட முக்கிய ஜோலிகளில் ஒன்றாகும். மற்றப்படி மகாத்மாஜியின் சுற்று வேலைகளைக் கவனிப்பதற்கும் அவருக்குவேண்டிய சிசுருஷைகள் செய்வதற்கு அவருடைய பேத்தி மனு காந்தி அவருடனேயே தங்கியிருக்கிறார். எனவே, மகாத்மாஜியோடுகூடத் தவிர்க்க முடியாத ஒரு சில குறிப்பிட்ட நபர்கள் மட்டுமே யாத்திரை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



மகாத்மாஜியும் பேத்தி மனுகாந்தியும்

பத்திரிகை நிருபர்கள் முகாமில் சுமார் ஆறு ஏழு பேர் இருந்தார்கள். எல்லாம் வங்காளியும் ஹிந்தியும் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கிடையே தமிழ் தெரிந்த ஒரு நிருபரும் இருந்தார். அவ்வளவு தூரத்தில் தமிழ் பேசத் தெரிந்தவரைக் கண்டதும் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அவர்தான் அமெரிக்கப் பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பும் யு. பி. நிருபர் என்று அருகிலிருந்தவர்கள் சொன்னார்கள். மேற்படி யு. பி. நிருபரை அணுகிப் பெயர் என்னவென்று விசாரித்தேன். மாணிக்க வாசகம் என்று பதில் இறுத்தார். நண்பர் மாணிக்க வாசகத்தின் மூலம் மகாத்மாஜி யாத்திரை சம்பந்தமான பல விவரங்களையும், நவகாளி ஜில்லாவிலே நடந்த கோர சம்பவங்களைப் பற்றியும் கேட்டுத் தெரிந்துகொண்டேன். இதற்குள் மணி நாலே முக்கால் ஆகிவிட்டது. "இன்னும் கால் மணி நேரத்தில் மகாத்மாஜி பிரார்த்தனைக்குக் கிளம்பி விடுவார்; நாமும் தயாராக இருக்க வேண்டும்" என்று எச்சரித்தார் மாணிக்க வாசகம்.

## "அச்சா, குத்தா!"

மகாத்மாஜி தங்கியிருந்த கட்டடத்துக்கு அருகில் போய்க் காந்திஜியின் புறப்பாட்டுக்காகக் காத்திருந்தோம். வாசலில் சுவான மண்டலம் போட்டுப் படுத்திருந்த ஒரு கறுப்பு நாய் எழுந்து நின்று உடம்பைச் சிலுப்பிக் கொண்டது.

"இது எது, இந்த நாய்?" என்று கேட்டேன்.

இதற்குள் மகாத்மாஜி தடியைப் பிடித்துக் கொண்டு வெளியே புறப்பட்டு விட்டார். வாசலில் நின்ற நாய் அவரை அணுகி அண்ணாந்து பார்த்தது. "அச்சா குத்தா!" என்று சொல்லிக் காந்திஜி சிரித்துக்கொண்டே அதை அன்புடன் தடவிக் கொடுத்தார். பிரார்த்தனைக்குப் போகும் வழியில் நண்பர் மாணிக்க வாசகம் அந்த நாயைப் பற்றிய ஒரு மயிர்க் கூச்செறியும் சம்பவத்தை எனக்குக் கூறினார்:

"நவகாளி ஜில்லாவிலுள்ள நோவாகாலா என்ற ஒரு சிறு கிராமத்தில் ஒரு பெரிய ஹிந்துக் குடும்பம் இருந்தது. அந்தக் குடும்பத்தில் ஆண் பெண் அடங்கலாக ஒன்பது பேர் இருந்தனர்.. அந்த ஒன்பது பேரும் வெறி கொண்ட காலிக் கூட்டத்தினரின் வாளுக்குப் பலியாகிக் கூண்டோடு கைலாசமாக யமலோகத்துக்கு அனுப்பப் பட்டார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நாய்தான் இது" என்றார்.

"இது எப்படி இங்கே வந்தது?" என்று மேலும் கேட்டேன்.

"மகாத்மாஜி மேற்படி கிராமத்துக்குப் போயிருந்த சமயம் இந்த நாய் அவரைப் பார்த்துவிட்டு ஓடி வந்து மகாத்மாஜியைச் சுற்றிச் சுற்றி வந்தது. உடனே தன்னுடைய குடும்பத்தார் வெட்டிப் புதைக்கப் பட்டிருந்த இடத்துக்கு மகாத்மாஜியை அழைத்துச் சென்றது. அங்கே சென்றதும் புதைக்கப்பட்ட இடத்தை மோப்பம் பிடித்துப் பிடித்துக் காட்டியது. காந்திஜி மேற்படி நாயின் நன்றி விசுவாசத்தையும், எஜமான பக்தியையும், அபூர்வ அறிவையும் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார். அன்று முதல் இந்த நாய் மகாத்மாஜி செல்லுமிடங்களுக்கெல்லாம் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது" என்று கூறினார் மாணிக்க வாசகம்.

(தொடரும்)

# வானசஞ்சாரம்

இசைத்தேனீ

சென்ற வார ரேடியோ நிகழ்ச்சிகளில் இரண்டு வயலின் கச்சேரிகள் முதல்தரமாய் அமைந்தன. 4வ. திருச்சியில் நடந்த மாயவரம் கோவிந்தராஜப் பிள்ளையின் கச்சேரி ஒன்று. அவர் வாசித்த ராகங்களும் உருப்படிகளும் கச்சிதமாயும் சுகமாயு மிருந்தன. ஸ்ரீ ரஞ்சனிக்கே முதல் ஸ்தானம் கொடுக்கவேண்டும். ஹிந்தோளமும், பல்லவி ராகமாம் சங்கராபரணமும், இறுதி ராகமாலிகையும் நல் வடிவங்களா யிழைந்தன.



சீதா கோவிந்தசாமி

9வ. சென்னையிலிருந்து கேட்ட மாரெல்லா கேசவராவின் வயலின் வாத்யம் மற்றொரு உயர்தரக் கச்சேரி. சுருதி சுத்தமும், கமக இழைப்புகளும் கொண்ட அழகு ராக வடிவங்களைச் சித்திரிப்பதில் வல்லவர். அதோடு அன்று வாசித்த ராகங்களெல்லாம் அபூர்வ வகைகள். ஆபேரியுடன், வஸந்த பைரவி, கோகிலத்வனி, மோஹன கல்யாணி ராகங்கள் தெளிவாயும், நற்சொருபங்களாயு மிழைந்தன.

7வ. சென்னையிலிருந்து கேட்ட எஸ். வித்யாவின் வீணாகானம் உயர்ந்த ரகமாயிருந்தது. வழக்கம்போல் மீட்டு நாஜூக்குடன், கமகங்களை நீட்டி அழுத்தி வாசித்தார். தோடியும், ஜனரஞ்சனி என்ற அபூர்வ ராகமும் வெகு சுகமாய் அமைந்தன. இறுதி ராகமாலிகை வசீகரமா யிருந்தது. 'தப்பிப்பிரதிகி' என்ற தோடி கிருதி மிகப் பழமையாயினும் அவர் கையில் தனி யழகுடன் விளங்கியது.

8வ. மாலை டில்லியிலிருக்கும் நமது தமிழ் நாட்டுக் கலைஞர்களைச் சிறிது கவனிக்கலாமென்று ரேடியோ ஊசியை அங்கு திருப்பினேன். எதிர்பார்த்ததற்கு மேல் பலன் கிடைத்தது. மாலை 5-45க்குச் சீதா கோவிந்தசாமி, ஏ. என். விசாலாக்ஷி இவர்களின் இரு குரலிசை ஒலிப்பதிவு காதில் விழுந்தது.



ஏ. என். விசாலாக்ஷி

கானம் வெகு நிதானமாயும், அழுத்தமாயும் இருந்தது. பைரவியும், ஸிம்மேந்திர மத்யமமும் நல்வடிவங்களா யிலங்கின. 'தனயுனி ப்ரோவ' 'வேலவனை அழைப்பாய்' என்ற உருப்படிகள் சாகித்யத் தெளிவுடன் ராக பாவம் நிறைந்து உருக்கமா யிருந்தன.

அடுத்தாற்போல் வி. ஆர். வேங்கடராமன் 'தமிழ்நாட்டுக் கலைகளில் நான் விரும்புவது எது?' என்பதைப் பற்றி ஒரு சொற்பொழிவு வாற்றியது வெகு ரஸமா யிருந்தது. தமிழ் நாட்டில் கோவில் இல்லாத ஊரில்லை. சிற்பம் ஓவியம் இவைகளின் சிறப்பில்லாத பெரிய கோவில்கள், அதிகம் என்று சொன்னவுடனே அவரது கருத்து விளங்கி விட்டது. கடைசியில், 'தமிழ் நாட்டுக் கலைகளில் சிற்பம், சித்திரம், கவிதை, இசை, நாட்டியம் இவைகளை நான் விரும்புவது' என்று சொன்னபோது எதைத்தான் அதிகமாய் விரும்புகிறார் என்றோ எதை விட்டு விட்டார் என்றோ தெரியவில்லை. தமிழ் நாட்டுக் கலைகளில் எதைப் பொறுக்கியெடுக்க முடியும், எதைத் தள்ள முடியும்?'

5வ. சென்னையில் எஸ். வி. பார்த்தசாரதி கல்யாணியை ராகம் தானம் பல்லவிக்காக எடுத்துக் கொண்டு வழக்கம் போல் விருவிருப்பாய் முக்கால் மணி நேரம் ஜமாய்த்தார்.

9வ. சென்னையில் நடந்த டி. கே. ராதாகிருஷ்ணனின் வேணுகானமும் சிறப்பா யிருந்தது. ரீதிகௌளை, சங்கராபரணம், தோடி ராகங்களும் உருப்படிகளும் சுருதிசுத்தமாயும் வடிவத் தெளிவுடனும் விளங்கின.

* * *

4வ. சென்னையில் ராஜம் வைத்யநாதனின் கானம் ரஞ்சகமும் நாஜூக்கு வழியும் கொண்டிருந்தது. பூர்விகல்யாணி, காம்போதி ராகங்களும், 'பரமபாவனு' கிருதியின் நிரவல் ஸ்வரங்களும் தரமாயிருந்தவை.

7வ. சென்னையிலிருந்து கேட்ட ஒரு கானம் மனதைக் கவர்ந்தது. குறிப்பிடத்தக்க சுருதி சுத்தம், பாணியழகு, பாவப்பொழிவு இவையெல்லாம் சேர்ந்திருந்தது. சங்கராபரணம் விரிவாயும், சஞ்சாரக் கோவை யெழிலும் கொண்டு சிறப்பாயிருந்தது. 'அக்ஷயலிங்கவிபோ'வில் நிரவல் ஸ்வரங்களும், 'அந்தருணம்' உருப்படியின் சாகித்யத் தெளிவும் பாவமும் கவனத்தை யிழுத்தன. பாடியவர் எஸ். சுப்பிரமணியம்.

9வ. சென்னையில் வாத்ய கோஷ்டியுடன் கலந்துகேட்ட ஏ. கே. ஸரோஜினியின் கானம் சுகமாயிருந்தது. 'வேணுவில் வஸந்தாவும், வீணையில் அமிருதவர்ஷிணியும் ஆலாபிக்கப்பட்டன. 'எவரிதை,' 'சுதாமயி' கிருதிகள் ஜோரா யிருந்தன.

அன்று அதே நிலயத்தில் பாடிய ராமநாதபுரம் கிருஷ்ணனின் பாட்டும் குறிப்பிடத்தக்கது. இளம் வித்வானுக்கு இயல்பான பிரு நிறைந்திருந்தது. மந்தாரி என்ற அபூர்வ ராகத்தைத் தைரியமாய்ச் சித்திரித்தார். பைரவியும் வனப்பா யிருந்தது.

10வ. சென்னையில் எஸ். ஜயலக்ஷ்மி, லால்குடி ஜாலாஸ்யம் இவர்களின் கச்சேரிகள் தரமா யிருந்தன.






D. W. 6284

விலாசம் மாறுதல்:



கான ஸரஸ்வதி

ஸ்ரீமதி D. K. பட்டம்மாள்

4, குப்புசாமி தெரு,

தியாகராயநகர் :: சென்னை








## 10. ஆண்டவன் சித்தம்

கொஞ்சம் கொஞ்சமாக மாணிக்கவல்லியிடமிருந்து முன் அத்தியாயத்தில் கூறிய விவரங்களையெல்லாம் மகாராஜா உலகநாதத் தேவர் கேட்டுத் தெரிந்துகொண்டார். சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து சும்மா இருந்த பிறகு இளவரசியை ஏறிட்டுப் பார்த்து, "உன் தந்தை என்னைப் பற்றி என்ன எண்ணியிருக்கிறார், என் பேரில் எவ்வளவு வன்மம் வைத்திருக்கிறார் என்று தெரிந்திருந்தும் என்னை இங்கே இருக்க வேண்டுமென்று சொல்லுகிறாயா?" என்று கேட்டார்.

"முக்கியமாக அதனாலேதான் உங்களை இருக்கச் சொல்லுகிறேன். இந்தக் கோட்டையில் இருந்தால்தான் நீங்கள் உயிர் தப்பிப் பிழைக்கலாம்" என்றாள் இளவரசி மாணிக்கவல்லி.

"எப்படியாவது உயிர் தப்பிப் பிழைத்தால் போதும் என்று ஆசைப்படுகிறவன் என்பதாக என்னை நீ நினைக்கிறாயா? மறவர் குலத்தில் இதற்கு முன் எத்தனையோ வீராதி வீரர்கள் இருந்திருக்கிறார்கள். மதுரைச் சிம்மாசனத்தில் அமர்ந்து குமரிமுனை முதல் இமய மலை வரையில் வீர பாண்டிய மன்னர்கள் அரசு புரிந்து மறவர் குலத்துக்கு என்றும் அழியாத புகழைத் தந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் போன்ற மகா வீரன் என்பதாக என்னை நான் சொல்லிக்கொள்ளவில்லை. ஆயினும் உயிருக்குப் பயந்து ஒளிந்து கொள்ளக்கூடிய அவ்வளவு கேவலமான கோழை அல்ல நான். வீர மறவர் குலத்துக்கும், புராதன மாறனேந்தல் வம்சத்துக்கும் அப்படிப்பட்ட களங்கத்தை நான் உண்டாக்கக் கூடியவன் அல்ல......"

உலகநாதத் தேவர் மேலே பேசிக்கொண்டு போவதற்கு முன்னால் சோலைமலை இளவரசி குறுக்கிட்டு, "ஐயா! அதோ குன்றின் மேல் தெரியும் சந்திரன் சாட்சியாகச் சொல்லுகிறேன். தங்களை உயிருக்குப் பயந்தவர் என்றோ, வீரமில்லாத கோழை என்றோ நான் ஒரு கணமும் நினைக்கவில்லை. எனக்கு உயிர்ப் பிச்சை அளியுங்கள் என்றுதான் தங்களை வேண்டிக் கொள்கிறேன். தங்களுக்கு ஏதாவது அபாயம் நேர்ந்தது என்று தெரிந்தால் அதற்குப் பிறகு என்னால் ஒரு நிமிஷமும் உயிர் வைத்துக்கொண்டிருக்க முடியாது. அப்படி இன்றைக்கே நீங்கள் கட்டாயம் போகத்தான் வேண்டுமென்றால் என்னையும் தங்களுடன் அழைத்துக்

கொண்டு போங்கள். தங்களுக்கு ஆகிறது எனக்கும் ஆகட்டும்!" என்றாள்.

அப்போது உலகநாதத் தேவருக்குப் பூமி தம்முடைய காலின் கீழிருந்து நழுவிச் சென்று விட்டது போலவும் தாம் அந்தரத்தில் மிதப்பது போலவும் தோன்றியது.

தம்முடைய காதில் விழுந்த வார்த்தைகள் தாம் உண்மையாகக் கேட்டவைதானா, அவற்றைச் சொன்னது இதோ தம் எதிரில் இருக்கும் திவ்ய சௌந்தரியவதியின் செவ்விதழ் வாய்தானா என்ற சந்தேகத்தினால் அவருடைய தலை சுழன்றது.

சற்றுப் பொறுத்து, "நீ சொன்னதை இன்னொரு தடவை சொல்லு. என் செவிகள் கேட்டதை என்னால் நம்ப முடியவில்லை!" என்றார் மாறனேந்தல் மன்னர்.

"ஏன் நம்ப முடியவில்லை?—நிஜந்தான்; நம்ப முடியாதுதான். என் தகப்பனாரைப் பற்றி நானே அவ்வளவு சொன்ன பிறகு, அவருடைய மகளை நம்புங்கள் என்றால் எப்படி நம்ப முடியும்? என் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கை உண்டாகாதுதான். எந்தச் சமயத்தில் என்ன துரோகம் செய்து விடுவேனோ என்று சந்தேகப்படுவதும் இயல்புதான். அப்படியானால், உங்கள் இடுப்பில் செருகியிருக்கும் கத்தியை எடுத்து என் நெஞ்சில் செலுத்தி ஒரேயடியாக என்னைக் கொன்றுவிட்டுப் போய் விடுங்கள். அதன் பிறகாவது என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை பிறக்குமல்லவா? அதுவே எனக்குப் போதும்!"

அடிக்கடி தேம்பிக் கொண்டே மேற்கண்டவாறு பேசி வந்த மாணிக்கவல்லியை இடையில் தடுத்து நிறுத்த உலகநாதத் தேவரால் முடியவில்லை. அவளாகப் பேச்சை நிறுத்தி விட்டுக் கண்ணீரை மறைப்பதற்காக வேறு பக்கம் பார்த்த பிறகுதான் அவரால் பேச முடிந்தது.

"இளவரசி! என்ன வார்த்தை பேசுகிறாய்? உன்னிடம் எனக்கு நம்பிக்கையில்லையென்று நான் சொல்லவேயில்லையே? நீ கூறிய விஷயம் அவ்வளவு அதிசயமாக இருந்தபடியால், 'என்னுடைய காதை என்னால் நம்ப முடியவில்லை' என்று தானே சொன்னேன்? என் கண்ணே! இதோ பார்!" என்று கூறிய வண்ணம், பூஜைக்குரிய புஷ்பத்தை ஒரு பக்தன் பூச்செடியிலிருந்து எவ்வளவு மென்மையாகத் தொட்டுப் பறிப்பானோ அவ்வளவு மென்மையாக உலகநாதத் தேவர் இளவரசியின் முகவாயைப் பற்றி, அவள் முகத்தைத் தம் பக்கம் திருப்பிக் கொண்டார். "இன்னொரு தடவை சொல்! உன்னைப் பெற்று வளர்த்து எவ்வளவோ அருமையாகக் காப்பாற்றி வரும் தகப்பனாரையும், இந்தப் பெரிய அரண்மனையையும் இதிலுள்ள சகல சம்பத்துக்களையும் சுக போகங்களையும் விட்டுவிட்டு, இன்று காலையிலே தான் முதன் முதலாகப் பார்த்த ஒரு அநாதையோடு புறப்பட்டு வருகிறேன் என்றா சொல்கிறாய்?" என்றார்.

"ஆமாம்; அப்படித்தான் சொல்கிறேன். ஒருவேளை எனக்குப் பைத்தியந்தான் பிடித்து விட்டதோ, என்னமோ? இன்று காலையிலேதான் உங்களை முதன் முதலாகப் பார்த்திருந்தாலும், எத்தனையோ காலமாக உங்களைப் பார்த்துப் பேசிப் பழகியது போலிருக்கிறது. உங்களை விட்டு ஒரு நிமிஷமும் என்னால் பிரிந்திருக்க முடியாது என்று தோன்றுகிறது. உங்களுக்கு வேண்டியவர்கள் எல்லாரும் எனக்கும் வேண்டியவர்கள், உங்களுடைய விரோதிகள் எல்லாரும் எனக்கும் விரோதிகள் என்பதாகவும் தோன்றுகிறது. இன்று சாயங்காலத்திலிருந்து என்னுடைய தகப்பனாரின் மேலேயே எனக்குக் கோபமாயிருக்கிறது!"



"இளவரசி! வேண்டாம்! இந்த மாதிரி தெய்விகமான அன்பைப் பெறுவதற்கு நான் எந்த விதத்திலும் தகுதியுடையவனல்ல. எவ்வளவோ கஷ்டப்பட வேண்டியவன் நான்; துன்பமும் துயரமும் அநுபவிப்பதற்காகவே பிறந்திருக்கும் துரதிர்ஷ்டசாலி. கட்டத் துணியில்லாத ஆண்டிப் பரதேசியைப் பார்த்து, 'உனக்கும் சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைக்கிறேன்' என்று சொன்னால் அது தகுதியாயிருக்குமா? கடவுளுக்குத்தான் பொறுக்குமா?"

"கடவுளுக்குப் பொறுக்காது என்று ஏன் சொல்லுகிறீர்கள்? ஆண்டவனுடைய சித்தம் நம் இருவரையும் ஒன்று சேர்க்க வேண்டும் என்று இருந்திரா விட்டால் இந்த மாதிரியெல்லாம் நடந்திருக்குமா? உங்களுக்கு ஏன் எதிரியின் கோட்டைக்குள்ளே ஒளிந்து கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது? நான் எதற்காக இராத்திரியெல்லாம் தூக்கம் பிடியாமல் புரண்டு கொண்டிருந்து விட்டு அதிகாலை நேரத்தில் தோட்டத்தில் பூப் பறிப்பதற்காக வருகிறேன்? சோலைமலை முருகனுடைய சித்தத்தினாலேயே இவ்விதமெல்லாம் நடந்திருக்க வேண்டும். ஆண்டவனுடைய சித்தத்துக்கு விரோதமாகத் தாங்கள்தான் பேசுகிறீர்கள்!"

"இளவரசி! நீ என்னதான் சொன்னாலும் சரி; எப்படித்தான் வாதாடினாலும் சரி! பயங்கரமான அபாயங்கள் நிறைந்த மகா சமுத்திரத்தில் குதிக்கப் போகும் நான், கள்ளங்கபடமற்ற ஒரு பெண்ணையும் என்னோடு இழுத்துக் கொண்டு குதிக்க மாட்டேன். அத்தகைய கல் நெஞ்சமுடைய கிராதகன் அல்ல நான்!"



"அப்படியானால் நான் சொல்வதைக் கேளுங்கள். இங்கேயே இன்னும் சில நாள் தங்கியிருங்கள். உங்களுக்கும் அபாயம் ஏற்படாது; எனக்கும் கஷ்டம் இல்லை."

"அது எப்படி, மாணிக்கவல்லி! உன் தகப்பனார் என்னை அவ்வளவு கொடுமையாகத் தண்டிக்க எண்ணியிருக்கும்போது இந்தக் கோட்டைக்குள்ளே நான் தங்கியிருப்பது எப்படிப் பத்திரமாகும்? இங்கே இருப்பதுதான் எனக்கு ரொம்பவும் அபாயம் என்பது உனக்குத் தெரியவில்லையா?"

இதைக் கேட்ட மாணிக்க வல்லி, உலகநாதத் தேவரைக் கம்பீரமாக ஏறிட்டுப் பார்த்துக் கூறினாள்:— "ஐயா! என் தகப்பனார் மிகவும் பொல்லாதவர்தான்; மூர்க்கக் குணம் உள்ளவர்தான். உங்களிடம் அவர் அளவில்லாத கோபம் கொண்டிருப்பதும் உண்மையே. ஆனாலும் அவருக்கு என்னிடம் மிக்க அன்பு உண்டு. அவருடைய ஏக புதல்வி நான்; தாயில்லாப் பெண். என்னை அவருடைய கண்ணுக்குள் இருக்கும் மணி என்று கருதிக் காப்பாற்றி வருகிறார். அவர் கோப வெறியில் இருக்கும்போது அவருடன் பேசுவதில் பிரயோஜனம் ஒன்றும் இல்லை. ஆனால், கொஞ்சம் சாந்தம் அடைந்திருக்கும் சமயம் பார்த்துப் பேசி அவருடைய மனதை மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இத்தனை காலமும் நான் ஒன்று கேட்டு அவர் 'இல்லை' என்று சொன்னதில்லை. உங்கள் விஷயத்திலும் அவருடைய மனதை மாற்ற என்னால் முடியும். நிச்சயமாக முடியும் என்ற தைரியம் எனக்கு இருக்கிறது. அதற்கு நீங்கள் மட்டும் உதவி செய்ய வேண்டும். நான் சொல்லுகிற வரையில் இங்கேயே இருக்க வேண்டும்!"

"நீ சொல்லுகிறபடி இங்கேயே இருப்பதற்கு நான் இஷ்டப்பட்டாலும் அது எப்படிச் சாத்தியம்? இந்த அரண்மனைத் தோட்டத்தில் நான் ஒருவர் கண்ணிலும் படாமல் காலங் கழிக்க முடியுமா? தோட்டக்காரர்கள், வேலைக்காரர்கள் வரமாட்டார்களா? வேளைக்கு வேளை நீ எனக்குச் சாப்பாடு கொண்டு வந்து போட்டுக் கொண்டிருக்க முடியுமா? திடீரென்று என்றாவது ஒரு நாள் உன் தகப்பனார் இங்கே வந்து என்னைப் பார்த்து விட்டால், அல்லது நீயும் நானும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டால், எவ்வளவு விபரீதமாக முடியும்? இளவரசி! கொஞ்சம் யோசித்துப் பார்! உனக்கும் கஷ்டத்தை உண்டாக்கிக் கொண்டு என்னையும் வீணாக ஆபத்துக்கு உள்ளாக்காதே!......" என்று உலகநாதத் தேவர் சொல்லி வந்தபோது, இளவரசி குறுக்கிட்டுப் பேசினாள்.

"நான் எல்லாவற்றையும் நன்றாக யோசித்து விட்டுத்தான் சொல்லுகிறேன். தங்களுடைய பத்திரத்தைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம். இந்தப் பெரிய அரண்மனைக்குப் பின்னால் 'சின்ன நாச்சியார் அரண்மனை' என்று ஒரு கட்டிடம் இருக்கிறது. அது வெகு காலமாகப் பூட்டிக் கிடக்கிறது. எங்கள் வம்சத்தில் நூறு வருஷத்துக்கு முன்னால் அரசாண்ட மகாராஜா,— என் பாட்டனாருக்குப் பாட்டனார்,— தம்முடைய சின்ன ராணியின் பேரில் ஏதோ சந்தேகப்பட்டு அந்த அரண்மனையில் அவளைத் தனியாகப் பூட்டி வைத்திருந்தாராம். அதற்குப் பிறகு அங்கே யாரும் வசித்தது கிடையாதாம். அந்த அரண்மனையின் சாவி என்னிடம் இருக்கிறது. தாங்கள் அங்கே பத்திரமாக இருக்கலாம். அப்பா கோட்டையில் இல்லாத நாட்களில் இருட்டிய பிறகு நாம் இங்கே சந்திக்கலாம். என்னுடைய செவிலித் தாய் வீரம்மா எனக்காக உயிரைக் கொடுக்கக் கூடியவள். உங்களிடமும் அவளுக்கு ரொம்ப மரியாதை உண்டு. உங்களைப் பற்றி இந்திரன், சந்திரன் என்றெல்லாம் என்னிடம் அவள் புகழ்ந்து பேசியிருக்கிறாள். அவள் மூலமாகத் தங்களுக்குச் சாப்பாடு அனுப்புகிறேன். அந்த ஏற்பாட்டையெல்லாம் என்னிடம் விட்டு விடுங்கள். நான் சொல்லுகிறபடி கொஞ்ச காலம் இங்கே இருப்பதாக மட்டும் தாங்கள் ஒப்புக் கொள்ளுங்கள்......!"

இப்படி இளவரசி சொல்லிக் கொண்டிருந்தபோது, கோட்டை



மதிலுக்கு அப்பால் வேட்டை நாய்கள் உறுமுகிற சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து நாய்கள் குரைக்கும் சத்தமும் கேட்டது.

இளவரசி சட்டென்று உலகநாதத் தேவரின் இரண்டு கரங்களையும் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள். அவளுடைய உடம்பெல்லாம் அப்போது நடுங்கியதை உலகநாதத் தேவர் உணர்ந்தார். அவளுடைய மார்பு படபடவென்று அடித்துக் கொண்ட சத்தம்கூடத் தேவரின் காதில் இலேசாகக் கேட்டது.

"அதோ, நாய் குரைக்கிறதே! அந்த இடத்துக்குச் சமீபமாகத்தானே தாங்கள் கோட்டை மதிலைத் தாண்டிக் குதித்தீர்கள்?" என்று மாணிக்கவல்லி நடுக்கத்துடன் கேட்டதற்கு, உலகநாதத் தேவர் "ஆமாம்" என்று கம்மிய குரலில் விடையளித்தார்.

வேட்டை நாய்கள் மேலும் குரைத்தன. அவற்றை யாரோ அதட்டி, உசுப்பிய சத்தமும் கேட்டது.

மாணிக்கவல்லி முன்னை விடக் கெட்டியாக உலகநாதத் தேவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு, கண்ணீர் ததும்பிய கண்களால் அவரைப் பார்த்து, "ஐயா! தங்களை ரொம்பவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தங்களுடைய ஜன்ம விரோதியின் மகளாயிருந்தாலும் இன்றைக்கு ஒரு நாள் மட்டுமாவது என்னை நம்புங்கள். இன்று இராத்திரி நீங்கள் வெளியே போக வேண்டாம்!" என்று கல்லும் கரையும் குரலில் கேட்டுக் கொண்டாள்.

ஏற்கெனவே, உள்ளம் கனிந்து ஊனும் உருகிப் போயிருந்த மாறனேந்தல் மகாராஜா மேற்படி வேண்டுகோளைக் கேட்டதும், "இன்று ஒரு நாள் மட்டுமல்ல; இனி என்றைக்குமே உன் விருப்பந்தான் எனக்குக் கட்டளை. நீ என் ஜன்ம விரோதியின் மகள் அல்ல; அன்பினால் என்னை அடிமை கொண்ட அரசி! போகலாம் என்று நீ சொல்லுகிற வரையில் நான் இங்கிருந்து போகவில்லை!" என்றார்.

இதைக் கேட்ட மாணிக்கவல்லி உணர்ச்சி மிகுதியால் நினைவை இழந்து மாறனேந்தல் அரசரின் மடியில் சாய்ந்தாள்!

## 11. அரண்மனைச் சிறை

மறு நாள் காலையில் குமாரலிங்கம் உறக்கம் நீங்கிக் கண்விழித்து எழுந்த போது, சூரியன் உதயமாகி மலைக்கு மேலே வெகு தூரம் வந்திருப்பதைப் பார்த்தான். "அப்பா! இவ்வளவு நேரமா தூங்கி விட்டோம்! பல தினங்கள் தூக்கமில்லாமல் அலைந்ததற்குப் பதிலாக இப்போது வட்டி சேர்த்துத் தூங்குகிறோம் போலிருக்கிறது!" என்று எண்ணித் தனக்குத் தானே நகைத்துக்கொண்டான். சுற்றுமுற்றும் பார்த்துத் தான் படுத்திருந்த இடத்தைக் கவனித்ததும் அவனுடைய நகைப்புத் தடைப்பட்டது. முதல் நாள் காலையில் தான் படுத்துத் தூங்கிய வஸந்த மண்டபம் அல்ல அது என்பதையும், அந்தப் பழைய கோட்டைக்குள்ளே இடிந்து கிடந்த பல பாழுங் கட்டிடங்களில் ஒன்றின் மேல் மச்சுத் தளம் அது என்று தெரிந்து கொண்டதும் அவனுக்கு ஒரே வியப்பும் திகைப்புமாய்ப் போய் விட்டது. நேற்றிரவு அவன் இந்தக் கட்டிடத்துக்கு வந்து மேல் தளத்தில் ஏறிப் படுத்துக் கொண்டதாகவே அவனுக்கு ஞாபகம் வரவில்லை. உறக்கக் கலக்கத்தோடு அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருக்கையில் தற்செயலாக இங்கே வந்ததும் படுத்துத் தூங்கிப் போயிருக்க வேண்டும்!

இது என்ன கட்டிடமாயிருக்கும்? ஒருவேளை......? ஆகா! சந்தேகம் என்ன? 'சின்ன நாச்சியார் அரண்மனை' என்பது இதுதான்!

பிறகு ஒவ்வொன்றாக இரவில் கனவிலே கண்ட நிகழ்ச்சிகள், கேட்ட சம்பாஷணைகள் எல்லாம் குமுறிக் கொண்டு ஞாபகம் வந்தன. உண்மையில் அவ்வளவும் கனவுதானா?

கனவு என்றால், அநுபவங்கள் எல்லாம் அவ்வளவு உண்மை போலத் தோன்றுமா? ஒரே நாள் இரவில் பத்துப் பதினைந்து தினங்களின் நிகழ்ச்சிகளை உண்மைபோல் உணர்ந்து அநுபவிக்க முடியுமா? அந்த அநுபவங்களும் பத்துப் பதினைந்து வருஷங்களின் நீடித்த அநுபவங்களைப் போல் உள்ளத்தில் பதிய முடியுமா?

இந்தப் பாழுங் கோட்டையில் ஏதோ மாய மந்திரம் இருக்கிறது! பொன்னம்மாள் சொன்னபடி மோகினிப் பிசாசு இல்லாவிட்டால், வேறு ஏதோ ஒரு மாயப் பிசாசோ, பில்லி சூனியமோ கட்டாயம் இங்கே இருக்கிறது. சேர்ந்தாற்போல் சில நாள் இங்கே இருந்தால் மனுஷனுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்து விடலாம்! உடனே இங்கிருந்து நடையைக் கட்ட வேண்டியதுதான்!...... பொன்னம்மாளை மறுபடியும் பார்க்காமலே போய் விடுகிறதா? அழகுதான்! பொன்னம்மாளாவது, கண்ணம்மாளாவது? ஐந்தாம் வகுப்புக்கூடப் பூர்த்தியாகப் படியாத பட்டிக்காட்டுப் பெண்ணுக்கும் காலேஜுப் படிப்பையெல்லாம் கரைத்துக் குடித்த தேசபக்த வீரனுக்கும் என்ன சிநேகம், என்ன உறவு ஏற்படக் கூடும்? இந்தப் பாழுங் கோட்டையிலுள்ள ஏதோ ஒரு மாய சக்தியினால்தான் பொன்னம்மாளைப் பற்றிய நினைவே தன் மனதில் உண்டாகிறது. உடனே இங்கிருந்து புறப்பட வேண்டியதுதான்! வேறு எங்கே போனாலும் பாதகமில்லை. இங்கே ஒரு நிமிஷங்கூட இருக்கக் கூடாது!

இவ்வாறு தீர்மானித்துக் கொண்டு, அந்தப் பழைய மாளிகை மச்சிலிருந்து கீழே குதித்து இறங்கி, ஒற்றையடிப் பாதையை நோக்கிக் குமாரலிங்கம் நடந்தான்.

திடீரென்று நாய் குரைக்கும் சத்தம் கேட்டது! குமாரலிங்கத்தின் நாவும் தொண்டையும் ஒரு நொடியில் வறண்டு விட்டன. அப்படிப்பட்ட பயங்கர பீதி அவனைப் பற்றிக் கொண்டது. காரணம் என்னவென்று யோசித்துப் பார்த்தால், நம்ப முடியாத அசட்டுக் காரணந்தான்! இரவில் கனவிலே கேட்ட வேட்டை நாயின் குரைப்புச் சத்தத்தை அது நினைவூட்டியதுதான்.

காரணம் எதுவாயிருந்தாலும் மனதில் தோன்றிய பீதி என்னமோ உண்மையாயிருந்தது. சட்டென்று பக்கத்திலிருந்த இடிந்த பாழுஞ் சுவர் ஒன்றுக்குப் பின்னால் மறைந்து நின்று, ஒற்றையடிப் பாதையில் யார் வருகிறார்கள் என்று கவனித்தான்.

அவன் மறைந்து நின்றதும் கவனித்ததும் வீண் போகவில்லை. சில நிமிஷத்துக்கெல்லாம் கையில் தடியுடன் ஒரு மனிதன் முன்னால் வர அவனைத் தொடர்ந்து ஒரு நாய் வந்தது. நாய் என்றால் தெருவில் திரியும் சாமான்ய நாய் அல்ல; பிரம்மாண்டமான வேட்டை நாய். முன் காலைத் தூக்கிக் கொண்டு அது நின்றால் சரியாக ஓர் ஆள் உயரம் இருக்கும்! எருமை மாட்டை ஒரே அறையில் கொன்று தோளிலே தூக்கிப் போட்டுக்கொண்டு அநாயாசமாகப் போகக்கூடிய வேங்கைப் புலியுடன் சரிசமமாகச் சண்டையிடக் கூடிய நாய் அது!

குமாரலிங்கம் மறைந்து நின்ற பாழுஞ் சுவருக்கு அருகில் வந்தபோது அந்த நாய் மேற்படி சுவரை நோக்கிக் குரைத்தது. முன்னால் வந்த மனிதன் திரும்பிப் பார்த்து, "சீ! கழுதை! சும்மா இரு!" என்று சொல்லிவிட்டுக் கைத்தடியால் நாயின் தலையில் 'பட்' என்று ஒரு அடி போட்டான். நாய் ஒரு தடவை உறுமிவிட்டுப் பிறகு பேசாமல் சென்றது. மனிதன் நாயை அடித்த சம்பவத்தைக் குமாரலிங்கம் சரியாகக் கவனிக்கவில்லை. கவனிக்க முடியாதபடி அவனுடைய மனதில் வேறொன்று ஆழமாகப் பதிந்து விட்டது. அப்படிப் பதிந்தது, நாயை அடிக்கத் திரும்பியபோது, நன்றாகத் தெரிந்த அந்த மனிதனுடைய முகந்தான். முறுக்கி விட்ட மீசையோடு கூடிய அந்த முரட்டு முகம், மாணிக்கவல்லியின் தந்தை சாக்ஷாத் சோலைமலை மகாராஜாவின் முகத்தைப் போலவே தத்ரூபமாக இருந்தது.

சுவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த படியினால் குமாரலிங்கத்துக்குத் தலை சுற்றிய போதிலும் கீழே விழாமல் தப்பிக்க முடிந்தது.

(தொடரும்)




## ஓர் அழகிய நங்கை...

லலிதா! உன்னதி யடைந்துவரும் ஏயர் லைன்ஸ் காரியநிர்வாகாதிகாரியாகிய, தென்னிந்தியாவினின்று முள்ள ஓர் இளைஞரின் மனைவியாகிய இவ்வழகுசுந்தரி, தனது எழிலைப் பாதுகாக்க, ஆயிரக் கணக்கான நம் மெல்லியர்களைப் போல புதிய முறையாகிய பாண்ட்ஸைக் கையாண்டு வருகிறாள்.





கணவனுக்கும் இள மைந்தனுக்கும் லலிதாமீது அளவு கடந்த ப்ரேமை!

....என் வீட்டிலுள்ள எல்லோருந்தான் அவளை உயிருக்குயிராக நேசிக்கிறார்கள்! ஏனெனில் லலிதா தன் யௌவன்யம் நிரம்பிய இயற்கையழகை பாண்ட்ஸால் காப்பாற்றி வருகிறாள். தினம் காலை, மாலைகளில், அவள் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் முகத்திற் பூசி, சொற்பநேரங்கழித்து அதை மெதுவாகத் துடைத்துக் களைகிறாள். தூசும், அழுக்குமெல்லாம் அத்துடனேயே வந்து விடுகிறது! பின்பு பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவுகிறாள். அது சருமத்தினுட்சென்று, உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்குத் திருப்பியளிக்கிறது. வதனம் பூவிதழ் போன்று மோகனகாந்தியுடன் விளங்குகிறது.....பகல் பூராவும்....மாலை பூராவும்!





"அம்மா, உன் முகம் எவ்வளவு மழமழப்பாக இருக்கிறது!"





பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்— தினம் காலை, மாலைகளில பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தைச் சுத்தம் செய்யுங்கள்—ஸோப்பு வேண்டாம். ஓரிரண்டு வாரத்தில் முகசருமம் நேர்த்தி மிக வாய்க்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—கோல்ட் க்ரீமைத் துடைத்துக் களைந்தும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தாராளமாகப் பூசிக்கொள்ளுங்கள். அது உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்கே திருப்பி யளித்து, வதனத்தை மிருதுவும், பளபளப்பு மாக்கிறது. அது கண்ணுக்குப் புலப்படவும் செய்யாது.

பாண்ட்ஸ் பவுடர்—பின்பு வேண்டுமானால், பாண்ட்ஸ் பவுடர் பூசிக்கொள்ளுங்கள்—உங்கள் முகச்சாயலுக்குகந்த வர்ணமாகத் தெரிந்தெடுத்து. அது முகத்திற்கு ரோஜா யிதழ் போன்ற ஓர் மோகன காந்தி யளிக்க உதவும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

வியாபார விவரங்களுக்கு இவ்விலாசத்திற் கெழுதவும்: எல். டி. ஸெய்மூர் & கோ., (இந்தியா) லிட்., பம்பாய் - கல்கத்தா - கராச்சி - சென்னை.

Copyright: Ponds Extract Co.

JWT

இப்பொழுது மீண்டும் கிடைக்கும்!
பெயர்போன
**'ஆடு மார்க்' துணிகள்**




பங்களூர் மில்ஸ் துணிகளெல்லாம் இப் பெயர்போன 'ஆடு மார்க்' குடையவைதான் — அவையின் உயர் குணத்திற்கும், உழைப்புத் தன்மைக்கும், சிறந்த பெறுமதிக்கும் இதுவே உங்கள் உத்தரவாதம். சென்ற ஏழாண்டுகளுக்கிடையே நாங்கள் இந்தியாவின் யுத்த முயற்சி காரியங்களில் இரவு பகல் ஓயாமல் முனைந்து வந்துள்ளோம். நீங்களும் போதிய துணிமணிகள் கிடைக்காமல் தவிக்க நேர்ந்தது. ஆனால் இப்பொழுது 'ஆடு மார்க்' ஸூட்டிங்குகளும் ஷர்ட்டிங்குகளும் இதர துணி தினுசுகளும் மீண்டும் வாங்கக் கிடைக்கும். அவை உங்களுக்களிப்பதாவன :—

**உயர் ரகம்** — 'ஆடு மார்க்' பருத்தி ஜவுளிகள் மிக நேர்த்தியான பருத்தியிலிருந்து அபூர்வத் திறமையுடன், இந்தியாவின் சீதோஷ்ண நிலைமைக்குகந்தாற் போல் நெசவு செய்யப் படுபவை.

**உழைப்புத்தன்மை** — இந்தத் துணிகள் நீடித்துழைக்கும். எவ்வளவு முரடாகச் சலவை செய்யப்பட்டபோதிலும் எளிதில் நாசமுமாகா.

**பெறுமதி** — 'ஆடு மார்க்' துணிகளின் விலைகள் அவையின் குணத்திற்கும், உழைப்பிற்குமொவ்வ, நியாயமானவைதான். இத் துணிகள் உங்கள் பணத்திற்குச் சிறந்த பெறுமதியே யென நாங்கள் உத்தரவாதமளிக்கிறோம்.

'வெல்லா' ஷர்ட்டிங்குகள் ★ லாங்கிலாத் ★ கோல்ட் ஸ்டாண்டர்ட் ஷர்ட்டிங்குகள் ★ லேடி லாங்கிலாத் ★ சாயம் தோய்த்த லாங்கிலாத் ★ டஸ்ஸோர்கள் ★ ஸைம்ரா ஸூட்டிங்குகள்.

யுத்தகால வேலை விவரம்

யுத்தத்திற்கிடையே பங்களூர் மில்ஸ் சர்க்காருக்கு ஸப்ளை செய்துள்ள பருத்திச் சரக்குகளின் விவரம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| பாரஷூட் பருத்தி நூல்க் கயிறுகள் 1 08,142 ராத்தல் | | |
| காக்கி ட்ரில் | 2,01,40,000 | கஜம் |
| ஒலிவ் க்ரீன் ஷர்ட்டிங் | 2,87,47,534 | ,, |
| பாரஷூட் துணி — உணவு ஸப்ளைகள் இறக்கிவிட | 1,03,00,000 | ,, |
| விமானிகளுக்குள்ள ஷர்ட்டிங்கும், மற்ற துணிகளும் | 1,20,45,439 | ,, |

உங்களுக்கு துணிகள் கிடைக்காமலிருந்ததன் காரணம் இதிலிருந்து விளங்கும்!

தயாரிப்போர்கள் :
**தி பங்களூர் மில்ஸ்**
தி பங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கோ., லிட்.,
பங்களூர் லிமிடெட்.

ஏஜண்டுகள், காரியதரிசிகள் டிரெஷரர்கள் :
பின்னி & கோ. (சென்னை) லிட்.

'ஆடு மார்க்' உடுப்பதற்கு யோக்கியமான துணிகளின் அறிகுறி.



# பங்காவாலா

எஸ். விஜயராகவன்

அப்பொழுது கோடை காலம். எங்கும் கடும் வெய்யில் படையும் பதைக்கும்படி காய்ந்து கொண்டிருந்தது. காரில் வந்த நான் மெதுவாக இறங்கி, கட்டிடத்துக்குள் நுழைந்தேன். உடம்பெல்லாம் ஒரே புழுக்கம்! ஆபீஸ் அறைக்குள் சென்ற பின்பும் அமைதியில்லை. எதிரே திறந்திருந்த ஜன்னல் வழியாக அடித்த தென்னைமரக் காற்றும் அனல் போலவே வீசிற்று.

"ஒரு பெரிய மின்சார விசிறி இருந்தால்......?" என்று எண்ணமிட்டேன். மின்சார சக்தியை மக்களின் அன்றாட வாழ்க்கையில் எதற்கும் பயன்படுத்திக் கொள்ளும் நிலையிலிருக்கும் இந் நாகரிக உலகத்திலும் மின்சார விசிறியும், விளக்கும் இல்லாத என் ஆபீஸைப் பற்றி நினைத்தபோது எனக்கு மிகவும் அதிசயமாக இருந்தது.

அன்றே ஒரு விண்ணப்பம் எழுதித் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பினேன். ஆனால் மின்சார விசிறி கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாகத் தலைக்கு நேராகத் தொங்கவிட்டுக் கொள்ள ஒரு பங்கா வந்து சேர்ந்தது; அதை இழுப்பதற்கு ஒரு பங்காவாலாவும் வந்து சேர்ந்தான்.

என் பங்காவாலா பார்ப்பதற்குப் பசுவைப் போல் சாதுவாகத் தோற்றமளிப்பான். ஆனால் எப்போதும் பித்தனைப் போல் பூலோகமோ கைலாசமோ என்று இருப்பான். என் இப்படி......? அதுதான் தெரியவில்லை!

இந்தப் பங்காவாலா என் காரியாலயத்தில் வேலை செய்வதுடன் நின்று விடுவதில்லை. நான் வீட்டுக்குப் போகும்பொழுது என்னுடன் வந்து விடுவான். பிறகு வீட்டு வேலைகளில் ஈடுபடுவான். பால் வாங்கி வருவது, தபாலாபீஸுக்குப் போய் வருவது ஆகியவை போன்ற வேலைகள் அவனுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டவை.

அன்று எனக்கு உடம்பு சரியாயில்லை; ஜலதோஷம். கோர்ட்டுக்குக் கூடப் போகவில்லை. இதைத் தெரிந்துகொண்டு என்னைப் பார்ப்பதற்காக வந்தார், அவ்வூர்த் தாசில்தார். அவர் போனபின் அவரது பெண் மிஸ் மோகனாவும் வந்திருந்தாள்.

மோகனாவிடத்தில் எனக்கு எல்லையற்ற பிரேமை. அன்பும், அழகும் ஒருங்கே சேர்ந்த அவள் என் இருதய பீடத்தில் இடம் பெற்றவள். இருவரும் சம்சார சாகரத்தை ஒரே வாழ்க்கைப் படகில் கடக்க வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தோம். ஆனால் எங்களது இன்பப் படகைச் செலுத்த மோகனாவின் தகப்பனாருடைய அனுமதி யென்னும் துடுப்பு தேவையா யிருந்தது. அதை அடைவதற்குத் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

"உங்கள் உடம்புக்கு என்ன, மாஜிஸ்டிரேட் ஸார்! நீங்கள் எப்பொழுதும் இவ் விஷயத்தில் அசட்டையாக இருக்கிறீர்களே!" என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் மிஸ் மோகனா.

"நாம் இருவரும் ஒரே வாழ்க்கைப் படகில் ஏறிச் சம்சார சாகரத்தைக் கடக்கும் அந்த நாள் வரும் வரை என் உடம்பு இப்படித்தான் இருக்கும்!" என்று கூறிச் சிரித்துக்கொண்டே, நான் அவளது மென்மையான கரங்களைப் பற்றினேன்.

அப்போது அறைக்கு வெளியே திடீரென ஏதோ அரவம் கேட்கவே திரும்பிப் பார்த்தேன். ஜன்னலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தான் பங்காவாலா. எங்களைக் கண்டதும் அவன் மெல்ல நழுவி விட்டான்.

மோகனா வெளியே சென்றதும் அவனைக் கூப்பிட்டேன். பயந்த வண்ணம் என் அறைக்குள் நுழைந்தான் அவன்.

"உன் பெயர் என்னடா?" என்றேன் அதட்டியபடி.

"முத்துச்சாமிங்க......!"

"வயது?"

"முப்பத்தி அஞ்சுங்க..."

"உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?"

"இல்லிங்களே...!" என்று ஏக்கத்துடன் கூறிய வண்ணம் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான் முத்துச்சாமி.

முப்பத்தைந்து வயதாகியும் பிரம்மச்சாரியாக இருக்கும் அவனது வாழ்க்கை மர்மத்தை அறிய வேண்டுமென்று என் மனம் துடித்தது.

எனவே மேலும் தொடர்ந்து, "ஏன் நீ இன்னமும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை? பெண் கிடைக்கவில்லையா?" என்றேன்.

"பெண் இருக்குதுங்க. ஆனால் பணத்துக்கு எங்கே போறதுங்க?" என்றான் பங்காவாலா.

"எதற்கடா பணம்? பெண் எங்கே இருக்கிறாள்?" என்றேன்.

"எங்க கிராமத்திலேயே ஒரு பெண் இருக்குதுங்க; பார்வதின்னு பேரு. ஆனால் அவ அப்பன் இருநூறு ரூபாய் பரிசம் கேட்கிறானுங்க!" என்றான்.

"பணம் இல்லேனு சொல்லிக்கிட்டே நீ சும்மா யிருந்தா அந்தப் பெண்ணுக்கு வேறு எங்கேயாவது கல்யாணம் ஆகி விட்டால் என்ன பண்ணுவே?" என்றேன் நான்.

"பார்வதிக்கு இப்ப இருபத்திரண்டு வயசாவுதுங்க. அந்த ஊரிலே இருக்கிற இளம் பசங்களெல்லாம் அவளுக்குச் சின்னவனுங்க. நான் ஒருத்தன்தான் அவளுக்குச் சரியான ......" என்று நிறுத்தினான் முத்துச்சாமி. அதற்கு மேலே என்ன வார்த்தை சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லை போலும்!

"பாவம், ஒருவேளை கல்யாணம் செய்து கொண்டால் சரியாக இருப்பானோ என்னவோ?" என்று எண்ணமிட்டேன் நான்.

கடைசியில், "அடுத்த ஞாயிற்றுக் கிழமை உன்னுடைய கிராமத்துக்கு நான் வருகிறேன். பார்வதியின் தகப்பனைக் கண்டு உன் கல்யாண விஷயமாகப் பேசலாம்" என்று கூறினேன்.

திடீரென்று ஏதோ உணர்ச்சி ரேகைகள் சிதறி ஓடின அவனது முகத்தில். பல்லைக் காட்டிய வண்ணம் வெளியே சென்றான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஒரு குதிரை வண்டியை அமர்த்திக் கொண்டு பங்காவாலாவின் கிராமத்துக்குக் கிளம்பினேன்.

பார்வதியின் தகப்பனான காளிமுத்து அறுபது வயது நிறைந்த கிழவன். அவன் குடிசை வாயிலை யடைந்ததும் என்னைக் கைகட்டி வரவேற்றான். பிறகு அவன் ஒரு கயிற்றுக் கட்டிலைத் தெருப் பக்கத்தில் போடவே, அதில் நான் அமர்ந்தேன்.

சற்று நேரத்துக்கெல்லாம் கையில் ஒரு மண் கலயத்துடன் அந்த வீட்டுக்குள் நுழைந்தாள் ஒரு மங்கை. அவள்தான் பார்வதியா யிருக்குமோ என்று சற்றுச் சந்தேகித்தேன். அவளையே பல்லையிளித்த வண்ணம் உற்று நோக்கிய என் பங்காவாலாவைக் கண்டதும் என் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று.

நான் கல்யாணப் பேச்சை மெதுவாக ஆரம்பித்தேன் காளிமுத்துவிடம். ஆனால் அவனோ கண்டிப்பாகப் பரிசப் பணத்தில் இருநூறு ரூபாய்க்கு ஒரு சல்லிக் காசு குறைந்தால் கூடத் தன் பெண்ணைக் கொடுக்க மாட்டேனென்று சொல்லி விட்டான். எனவே அதே வண்டியில் வீடு திரும்பினேன். மிகவும் ஏமாற்றமடைந்த என் பங்காவாலாவின் முகத்தில் ஈயாட வில்லை. மௌனமாக எனக்கு முன்னால் வண்டிக்காரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான்.

அவனைத் தேற்றும் முறையில், "முத்துச்சாமி! இது கிடக்கட்டும். இந்த முரட்டுப் பெண்ணுக்கா இருநூறு ரூபாய்? இந்தப் பணத்தைக் கொடுத்தால் ஒரு தேவ ராணியையே அழைத்து வந்து விடலாமே!" என்றேன்.




'தேவராணி' எப்படி யிருப்பாள் என்று அவனுக்குக் கற்பனை செய்யக்கூடத் தெரியவில்லையோ என்னவோ, அதற்கும் மௌனமாக இருந்தான் அவன்!

## 2

மாதங்கள் பல மறைந்தோடின. அப்போதும் என் பங்காவாலாவுக்குக் கல்யாணம் ஆகவில்லை. அச்சமயம் என் ஊருக்கு ஒரு பெரியவர் வந்திருந்தார். அவர் ஓர் அனாதாசிரமத்தின் தலைவர் என்று தெரிய வந்தது.

அவரது ஆசிரம நிதிக்குப் பொருள் திரட்டும் நோக்கத்துடன் சுற்றுப் பிரயாணம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு என்னிடம் வந்தார். அவரது ஆசிரம நிர்வாகத்தைப் பற்றி விசாரித்தேன். அங்கே எண்ணற்ற அனாதைப் பெண்களும் ஆண்களும் வேலை செய்வதாகவும் அவர்களுக்கு இவர் உணவளித்து வருவதாகவும் சொன்னார்.



எனக்கு அப்போது சட்டென்று பங்காவாலாவின் ஞாபகம் வந்தது. அவன் கதையைச் சொல்லி அவனுக்கேற்ற ஒரு பெண் அவரது ஆசிரமத்திலிருந்து கிடைப்பாளா வென்று கேட்டேன்.

"வேண்டிய பெண்கள்! ஆனால் அவளுக்கு உணவளித்துக் காப்பாற்ற முடியுமா, ஆயுள் முழுவதும் அவனால்?" என்று கேட்டார்.

"ஆகா! வாழ்வில் பெண் நட்புக்கு ஏங்கிய அவனது உள்ளத்தில் எவளும் நிச்சயம் உன்னத இடம் பெறுவாள்!" என்றேன் நான்.

பிறகு அவரது விருப்பப்படி நான் ஒரு நாள் அவரது ஆசிரமத்தை யடைந்தேன். பெண்கள் இருக்கும் மண்டபத்துக்குச் சென்ற பொழுது அங்கே எண்ணற்ற அனாதைப் பெண்கள் ராட்டை சுற்றி நூல் நூற்றுக் கொண்டும், பாய்கள் பின்னிக் கொண்டும் இருந்தனர்.

அவர்களைப் பார்த்துக் கொண்டே வந்த எனக்குத் திடீரென ஒரு பிரமிப்பு! ஏனெனில் அந்தக் கூட்டத்தின் நடுவே ஒரு பழைமையான முகம்!

சற்றே நின்று, "உன் பெயரென்ன?" என்று வினவினேன். பளிச்சென்று, "பார்வதி!" என்று விடை யளித்தாள் அப்பெண். அவளை உற்று நோக்கினேன். ஆம்; அதே பார்வதிதான்!

ஆனால் இப்பொழுது அவளது தோற்றத்தில்தான் என்ன வித்தியாசம்? அவளது வலிவும் வனப்பும் எங்கே மறைந்து விட்டன? அன்று குறும்புச் சிரிப்புடன் தோற்றமளித்த அவளது முகமண்டலத்திலே ஏன் இந்தச் சாந்தம்?

மெதுவாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன். பிறகு ஆசிரமத் தலைவரிடம் அவளது பூர்வாங்க சரிதத்தைப் பற்றிக் கேட்டேன். அவர் தனது பழைய காகிதக் கட்டுக்களைப் பிரித்துப் பார்த்துவிட்டு விஷயம் முழுவதையும் சொன்னார்.

வழக்கமான கதைதான்: தக்க வயதில் மணம் செய்விக்காமல் வீட்டில் வைத்திருந்த பார்வதியின் நடத்தையைச் சந்தேகித்து அவளை மிகவும் துன்புறுத்தினான் அவளது தகப்பன். ஓரிரவு வீட்டை விட்டு வெளியேறிய அவளுக்கு இவ்வனாதாசிரமம் இடமளித்தது.

என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, பார்வதியைக் கூப்பிட்டு அனுப்பினார் ஆசிரமத் தலைவர். அவள் வந்ததும், "உனக்குக்

கல்யாணம் செய்து கொள்ள விருப்பம் தானே?" என்று கேட்டேன். அவள் மௌனமாக, 'உம்' என்று தலையசைத்தாள்.

மறுநாள் கிளம்பி ஊர் வந்து சேர்ந்தேன். பங்காவாலாவை அழைத்து, "பார்வதியை மணந்துகொள்ளச் சம்மதமா?" என்று கேட்டேன்.

"அவள் எங்கிருக்கிறாள் சாமி? அவள் தான் எங்கேயோ ஓடிவிட்டாளே? அவள் செத்துப் போய்விட்டாள் என்றுதான் நாங்கள் நினைத்துக்கிட்டு இருந்தோம்" என்றான் பங்காவாலா.

நான் விவரம் முழுவதையும் கூறியதும், அவன் உடனே தன் சம்மதத்தைத் தெரிவித்தான். அடுத்த வாரமே ஆசிரமத்துக்குப் போய்க் கல்யாணத்தை முடிவு செய்வதாகத் தீர்மானித்தேன்.

## 3

மறுநாள் காலை வழக்கப்படி வேலை செய்ய வரவில்லை பங்காவாலா. எங்கே சொல்லிக் கொள்ளாமல் மறைந்து விட்டான்? அதுவும் தெரியவில்லை!

இதற்குள் எனக்கும், மோகனாவுக்கும் விவாகம் நிச்சயமாயிற்று. மணம் முடிந்தவுடனேயே அவளை வீட்டுக்கு அழைத்து வருவதாக இருந்தேன்.

இரண்டு நாட்கள் கழிந்தன. மறுபடியும் திடீரென்று பிரசன்னமானான் என் பங்காவாலா.

"எங்கேயடா சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டாய்?" என்று வினவினேன் கோபத்துடன்.

"சாமி......!" என்று அழ ஆரம்பித்தான் அவன். பிறகு மேலும் தொடர்ந்து,

"நான் என் கிராமத்துக்குப் போயிருந்தேனுங்க. ஓடிப்போன பொம்புளையைக் கட்டிக்கக் கூடாதுன்னு எங்க அப்பன் சொல்லுது. நாட்டாமைக்காரருகூட சம்மதிக்க மாட்டேன்கிறாரு!" என்றான்.

இதைக் கேட்ட எனக்கோ சொல்லொணாத ஆத்திரமாயிருந்தது. "எப்படியோ செத்துச் சுண்ணாம்பாகத் தொலை! உனக்குக் கல்யாணமானால் என்ன, ஆகாவிட்டால்தான் எனக்கென்ன?" என்றபடி உள்ளே சென்றேன்.

மறுநாளே பெருத்த மனப் போராட்டத்துக்கிடையே என் பங்காவாலாவின் உத்தியோகத்துக்குச் சீட்டுக் கொடுத்து அனுப்பினேன். ஏனெனில், மோகனாவுடன் நான் இன்ப வாழ்வு ஆரம்பிக்கும் இச்சமயத்தில் ஸ்திரீ நட்புக்கு ஏங்கும் அவனை என் அருகில் வைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை.

காலப் பறவை வருடமென்னும் இறகு கொண்டு சுமார் பத்துக் கல் தூரம் பறந்து சென்று விட்டது. அப்போது நான் திருச்சிக்கு மாற்றலாகி வந்து சேர்ந்தேன். காலப்போக்கில் என்னுடைய பழைய பங்காவாலாவும் என் மனதிலிருந்து மறைந்தே விட்டான்.

ஒரு நாள் எதிர்பாராத விதமாகப் பழைய ஆசிரமத்துத் தலைவரைச் சந்தித்தேன். அப்போது என்னை யறியாமல் பார்வதியின் பரிதாபகரமான முகம் என் மனக் கண் முன் காட்சி யளித்தது. "உங்களுடைய ஆசிரமத்தில் பார்வதி என்று ஒரு பெண் இருந்தாளே, அவள் எங்கிருக்கிறாள்?" என்று கேட்டேன்.

"அவள் அப்போதே ஒருவனை விவாகம் செய்து கொண்டு போய் விட்டாளே!" என்றார் அவர்.

"யார் அந்த ஒருவன்?"

"அவன்தான் உங்கள் பங்காவாலா!" என்றார் அவர்.

இதைக் கேட்டு நான் திகைத்துப் போனேன். "பாவம், அவனை மீண்டும் ஆபீஸில் பங்காவாலாவாக வைத்துக் கொண்டால் என்ன?" என்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் எனது புதிய ஆபீஸில்தான் மின்சார விசிறி இருக்கிறதே, பங்காவாலா என்னத்திற்கு?

## பயிற்சி கொடுக்கிறார்!



"என்ன அண்ணே! மாடு சும்மா நிக்குது; நீ புல் தின்கிறயே?"

"அதுவா, அது பட்டணத்திலே யிருந்து வந்த மாடு; அதைப் புல் மேயப் பழக்குகிறேன்!"




## லாஹூலில்

...ம்மறியாடுகளுக்கும், பிரசித்தி பெற்ற பாஷ்மினா வெள்ளாடுகளுக்கும் செழிப்பான மேய்ச்சல் தரைகளோடு கூடின லாஹூல் மேற்கு திபெட்டுக்கும் வட பஞ்சாபுக்கும் மத்தியிலுள்ள ஓர் மலை நாடு. அது கடல் மட்டத்திலிருந்து 10,000 அடிக்குக் குறையாத உயரத்திலிருக்கிறது. மலை நாடானதாலும், கடுமையான சீதோஷ்ண ஸ்திதி காரணமாகவும் நாட்டு மக்கள் அதி திடகாத்திரர்களாக ஏற்பட்டுள்ளார்கள். எனினும் நேர்த்தியான ஆடையாபரணங்களில் ஸ்திரீகளுக்குள்ள அளவு கடந்த ஆசையை அவைகள் மட்டுப்படுத்த முடிகிறதில்லை. பண்டிகை நாட்களில் லாஹூல் ஸ்திரீகள் பச்சை, நீலம், பவளம் முதலிய மாமணி மாலைகளும், வெள்ளி நகைகளும் சற்றேனும் ஐயமின்றி அணிந்து கொள்வதைக் காண வெகு விசித்திரமாகத் தானிருக்கும். சுத்த நெஞ்சம் படைத்தவர்களும் சிநேக பாவம் மிகுந்தவர்களுமாகிய இம் மலைநாட்டாருடன் நமக்கு நெருங்கின தொடர்பு வைத்துக் கொள்வதற்கு ஹிமாலயக் கிழ் தொடர்கள் பெருத்த தடையாயிருக்கின்றன. அப்படியிருந்தபோதிலும் வெகு தொலையிலுள்ள இந்நாட்டினுள்ளும் ஹமாம் ஸோப்பு எப்படியோ நுழைந்து விட்டது!






# ஹமாம்

பாரத நாட்டு மக்களின் மனதிற்குப் பிடித்த ஸோப்பு

டாம்கோ விற்பனை இலாகா
19-A, வாணியர் தெரு
த. பெ. நெ. 31, மதராஸ்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



மரச் சாமான்கள்

மரங்களை வெட்டி வீழ்த்தி மேசை நாற்காலி அலமாரி முதலியவைகளாக அமைக்க எஃகு ஆயுதங்கள் இன்றியமையாதவை.

டாடா எஃகு

டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை சேல்ஸ் ஆபீஸ்: 102-A, கிளைவ் தெரு, கல்கத்தா

T. N. 179





### விஷயம் புரிந்தது!

மாமியார் திடீரென்று ஊரிலிருந்து வந்தாள். மாலை ஆறு மணி யாகியும் மாப்பிள்ளை வராமல் இருக்கவே, "என்னடி அம்புலு, இன்னும் மாப்பிள்ளையைக் காணோமே! ஐந்து மணிக்கே வந்து விடுவார் என்றாயே!" என்றாள்.

அம்புலு:—அதென்னமோ அம்மா, எனக்கு ஒன்றும் தெரியல்லே! நீ வந்திருக்கிறாய் என்று ஒரு வார்த்தை சொல்லி யனுப்பினேன்; அவ்வளவுதான்!

### கேள்வியும் பதிலும்

மழை கொட்டு கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. கடன்கார சௌக்கார் ஒரு வீட்டுக் கதவை பிடித்து, "ஐயா இருக்காரா?" என்று கேட்டார்.

ஒரு பெண் குரல், "அவர் இல்லே; வெளியே போயிருக்கிறார்!" என்றது.

"என்ன அம்மா, புளுகறே? இந்த அடை மழையிலே எந்த மடையன் வெளியே கிளம்புவான்?" என்றார் சௌக்கார்.

மாடியிலிருந்த ஐயர் கோபமடைந்து, "ஓய், யாருங்காணும் மடையன்? மழையில் கிளம்பியது நீரா, நானா?" என்று கேட்டார்.

### ரொம்ப சரி

கனகம்:—அடுத்த வீட்டு அம்மாமி உன் வயது என்ன என்று கேட்டாள். பதினைந்தா, பதினாறு என்று எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.........!

கமலி:—நீ என்ன சொன்னே?

கனகம்:—பதின்மூன்று என்று சொல்லி விட்டேன்!

### நியாயமா?

"ஏண்டா, வேஷ்டி வாங்கிக் கொடுத்து ஒரு மாசம் ஆகவில்லை, அதற்குள்ளே கிழித்து விட்டாயே! ஹூம்!"

"என்னப்பா நீ? பத்து நாள் முந்தி கிழிஞ்சதுக்கு இப்ப வந்து கோவிச்சுக்கிறயே!"

### பேஷ்!

மானேஜர்:—ஏண்டா வரதா, நேற்றைய தினம் நீ ஏன் ஆபீஸுக்கு வரவில்லை? அதற்கு ஏதாவது நொண்டிச் சாக்கு தயாராய் வைத்திருக்கிறாயோ, இல்லையோ?

வரதன்:—இல்லைங்க, ஸார்! நேற்று மாடியிலே யிருந்து சறுக்கி விழுந்து கால் சுளுக்கிக்கிடுச்சுங்க! நடக்க முடியலிங்க!

### நல்ல பழக்கம்

நீதிபதி:—சில இரும்பு ஆயுதங்களோடு நீ கட்டிலுக்கு அடியிலே ஒளிந்து கொண்டிருந்ததாகச் சொல்லுகிறார்களே, அதற்கு நீ என்ன சொல்லப் போகிறாய்?

குற்றவாளி:—நான், மோட்டார் ரிபேர் செய்கிறவனுங்க! அந்தப் பழக்கத்திலே அப்படிப் படுத்துக்கிட் டிருந்தேனுங்க!

### சந்தேகமில்லை!

"திருடன், பிச்சைக்காரன் இன்னும் இந்த மாதிரி சந்தேகப்படக் கூடிய ஆசாமிகள் வந்தால் உங்கள் நாய் குரைக்குமா?"

"ஆகா! நன்றாய்க் குரைக்கும், நீங்கள் வந்தபோது கூடத்தான் அது குரைத்ததே, கவனிக்கவில்லையா?"

## அவன் கற்றுக் கொண்டது!



தகப்பனார் (முதல் நாள் பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டு வந்த பையனைப் பார்த்து):— இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் என்னடா கற்றுக் கொண்டாய்?

பையன்:— ஒன்றுமில்லை; 'நாளைக்கு மறுபடியும் போக வேண்டும்' என்று கற்றுக் கொண்டேன், அப்பா!




ஆசிரியர் : சுதர்சன் மொழிபெயர்ப்பு : ரா. வீழிநாதன்

## ரூபராணி சொல்லுகிறாள் :

### 13. நீறு பூத்த நெருப்பு!

அந்தச் சம்பவத்தைக் கேட்டபிறகு எனக்குக் கணவர் மீதிருந்த மரியாதை வரவரக் குறைய ஆரம்பித்து விட்டது. அவர் என் அருகில் வந்து விட்டாரானால் என் உள்ளம் பதறும். 'இந்த வீட்டையே விட்டுவிட்டுக் கண்காணாத இடத்துக்கு ஓடிவிட்டால் என்ன?' என்ற எண்ணம் என் உள்ளத்தில் அடிக்கடி எழும். 'நான் என் கடமையைச் சரிவர உணரவில்லை' என்று சொல்லி விடுவதற்கில்லை. நான் என் மனத்துடன் இதற்காக எவ்வளவோ போராடினேன். ஆனால் மனம் கேட்டால் தானே! நான், 'என்ன இருந்தாலும் அவர் என் கணவர் அல்லவா?' என்பேன். 'ஆமாம், அதற்கென்ன? அவர் செய்த பாவம் சாமான்யமானது என்று எண்ணுகிறாயா?' என்று மனம் என்னைத் திருப்பிக் கேட்கும். 'அறியாப் பருவத்தில் யாருக்குமே பிழை ஏற்படுவது சகஜம் தானே?' என்பேன். 'இதைப் பிழை என்று எண்ணுகிறாயா? இல்லவே இல்லை. இது ஆப்த நண்பனுக்கு இழைத்த துரோகம்!' என்று மனம் என்னை மடக்கும்.

அவர் என்னிடம் இந்தச் சம்பவத்தைச் சொல்லாமல் இருந்திருந்தால் என் உள்ளத்தில் இப்படித் தீப் பற்றி யிருக்குமா? தான் செய்த செய்கைக்காக அவர் என்னிடம் மன்னிப்புக் கோருவார்; மனம் புழுங்கி வருந்துவார்; என் எரியும் உள்ளத்தைக் குளிரச் செய்ய முயற்சிப்பார். ஆனால் இதற்கெல்லாம் என் உள்ளத் தீ அணையவில்லை; அதிகமாகித்தான் வந்தது.

நாங்கள் இருவரும் ஒரே வீட்டில்தான் இருந்தோம்; ஒரே அறையில்தான் படுத்துத் தூங்கினோம். ஆனால் ஒருவருக்கொருவர் முகம் கொடுத்துப் பேசி எத்தனையோ வாரங்கள் ஆகிவிட்டன. நான் ஒருபுறம் பார்த்தால் அவர் ஒருபுறம் பார்ப்பார். நவக்கிரகங்களைப் போல எங்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. எப்பொழுதாவது பேசும்படி நேர்ந்து விட்டால் நாங்கள் நேர்முகமாகப் பேசிக் கொள்வதே இல்லை. 'யாருக்கோ, எவருக்கோ' என்றுதான் சுவரைப் பார்த்துப் பேசிக் கொள்ளுவோம். ஏதாவது சொல்ல வேண்டி வந்து விட்டால், "சமையலாகி ஒரு மாமாங்கம் ஆகப்போகிறது; இன்னும் சாப்பிடப் போகக் காணோம். அப்புறம் ஆறிப்போய் விட்டால் சமையற்காரனைக் கோபித்துக் கொள்ளுவது!" என்பேன். அவர் – என் காதுகளில் விழும்படியாக, "இந்த நாசமாய்ப் போகிற புஸ்தகங்களை யெல்லாம் அப்புறம் படித்துக் கொள்ளக் கூடாதோ? டிரைவர் அப்பொழுதே பிடித்து 'ஹார்ன்' அடித்துக் கொண்டிருக்கிறானே, உலாவப் போய்விட்டு வருவதற்கு ஏன் இப்படி வலிக்கிறதோ?" என்பார்.

இப்படியே எங்கள் வாழ்நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

அவர் கம்பெனிக்குப் புறப்பட்டுப் போய் விட்டாரானால், "இம்மாதிரிப் பேசாமல் எவ்வளவு நாள்தான் இருப்பது? இன்றைக்குத் திரும்பி வந்ததும் அவருடன் பேசிவிட வேண்டும்" என்று எண்ணுவேன். ஆனால் அவர் வந்து விட்டால் விஷம் மறுபடியும் தலைக்கேறிவிடும். அவர் முகத்தில் விழிக்கவே கூடாது என்று எண்ணுவேன். நான் காட்டும் அன்பு இருக்கிறதே, அது வெகு விசித்திரமானது. அவர் வந்து விட்டால், அது ஓடி ஒளிந்து கொள்ளும். அவர் கண்ணுக்கு மறைந்து விட்டால் 'இதோ, நான் இருக்கிறனே!' என்று என் முன்னால் வந்து நிற்கும். அவரும் என்னுடன் பேசவேண்டுமென்று வெகு ஆவலாயிருக்கிறார் என்பது அவருடைய முக பாவத்திலிருந்து விளங்கும். அவருடைய உதடுகள் என் பெயரைச் சொல்லிக் கூப்பிடத் துடியாய்த் துடிக்கும். ஆனால் வெகு சிரமப்பட்டு அவர் அதை அடக்கிக் கொள்வார். 'நாம் பேசினால் அவள் நம் மீது எரிந்துவிழுந்தால் என்ன செய்வது!' என்ற பயம்தானோ என்னவோ, அவர் என்னுடன் வாய்திறந்து பேசுவதேயில்லை. ஆனால் முன் போலவே என்னைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வந்தார். 'நான் பழம் சாப்பிட்டேனா, பால் குடித்தேனா, உலாவப் போனேனா?' என்பது போன்ற சின்னஞ் சிறு விஷயங்களில்கூட' அவர் கவனம் செலுத்த ஒருநாளும் தவறியதில்லை.

ஒரு நாள் நான் இரண்டு தோழிகளுடன் சினிமா பார்க்கப் போயிருந்தேன். ஆட்டம் முடிந்து நாங்கள் வெளியில் வந்து பார்த்தால் காரில் டிரைவரைக் காணோம். அவனுக்காக நாங்கள் நாலைந்து நிமிஷங்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டி வந்து விட்டது. அவன் தேநீர் அருந்துவதற்காகப் போயிருந்தான் போலிருக்கிறது. இந்த விஷயம் அவருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. பார்க்கப் போனால் இது தூசி பெறாத விஷயம். ஆனால் மறுநாள் டிரைவரைக் கூப்பிட்டு, — அப்பப்பா! காது கொடுத்துக் கேட்க முடியவில்லை — அப்படித் திட்டிவிட்டார். அவன் கெஞ்சாக் குறையாகக் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். 'இனிமேல் இப்படிச் செய்யவே மாட்டேன்' என்று அழாத தோஷமாகச் சொன்னான். ஆனாலும் அவர் இதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்டால்தானே? "ஏண்டா! காரை விட்டு விட்டுப் போனாய்? எசமானி அம்மாள் உனக்காகக் காத்துக் கொண்டு நிற்க வேண்டும் என்ற எண்ணமா? அம்மாவின் பின்னோடு வந்த தோழிகள் மனதில் என்ன சொல்லிக் கொள்ளுவார்கள்? 'இவர்கள் வீட்டில் நல்ல டிரைவர் பார்த்து வைத்துக் கொண்டார்கள்! அவன் சுருட்டுக் குடித்து விட்டு, டீ அருந்திவிட்டு, அரட்டையடித்து விட்டு மெதுவாக வரும் வரை நாம் காத்துக் கொண்டு தவம் கிடக்க வேண்டும்போலிருக்கிறது! என்ன இருந்தாலும் இந்த டிரைவர்களுக்கு இவ்வளவு இடம் கொடுக்கக் கூடாது!' என்று பேசிக்கொள்ள மாட்டார்களா? உனக்கென்னடா போச்சு! நீ குஷியாய்ச் சுருட்டுக் குடித்துக்கொண்டு நிற்பாய்! எனக்கல்லவா மானம் போச்சு! போதும் அப்பா, போதும்! உன் மாதிரி வேலைக்காரனை வைத்துக் கொண்டால் நான் உருப்பட்டாற்போலத்தான்! கணக்கைத் தீர்த்துக்கொண்டு நீ இன்றைக்கே நின்றுவிடு. உனக்கும் எவ்வளவோ வேலை கிடைக்கும்; எனக்கும் ஆளுக்குப் பஞ்சம் இல்லை!" என்று படிப்படியாக மேலே பேசிக் கொண்டே போனார்.

நான் என் அறையில் உட்கார்ந்து இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். விஷயம் முற்றுவதைக் கண்டு என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. முற்றத்துக்கு வந்து, "பாவம், அவன்தான் 'செய்தது தப்பு' என்று மன்னிப்புக் கேட்கிறானே, இந்தத் தடவை விட்டு விடுங்கள்!" என்று அவரிடம் சொல்லிவிட்டு டிரைவரைப் பார்த்து. "இனிமேல் இப்படி யெல்லாம் செய்யாதே! ஐயா இந்தத் தடவை மன்னித்து விடுவார், போ!" என்றேன்.

டிரைவர் இரண்டு கைகளாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போடுகிறவன் போல நின்ற வண்ணம், "அம்மா, இனிமேல் இதுமாதிரித் தப்புப் பண்ணினால் என் தோலை உரித்து விடுங்கள்!" என்றான்.

நான் மறுபடியும், "அவனும் மனிதன் தான்; மிருகம் இல்லை. இனிமேல் தப்புச் செய்ய மாட்டான். போனால் போகிறது, இந்தத் தடவை மன்னித்து விடுங்கள்!" என்று சிபார்சு செய்தேன்.

அவர் என்னைப் பார்க்க எண்ணித் தம் தலையை நிமிர்த்தினார். ஆனால் பார்க்கத்



தைரியம் வரவில்லை. அவருடைய தலை தானே கவிழ்ந்து விட்டது. தீ அணைந்து விட்டபிறகும் சாம்பல் சூடாயிருக்கிற தல்லவா? அதே போலத்தான் எங்களிரு வரது நிலையும் இருந்தது. "இந்தத் தடவை போனால் போகிறது, மன்னித்து விடு கிறேன். இனிமேல் இது மாதிரி ஏதாவது தப்பு கிப்பு செய்தால் வேலையை விட்டே நீக்கி விடுவேன். போ, பிழைத்துப் போ!" என்று அவனிடம் சொன்னார்.

டிரைவரும் 'தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று எண்ணி மெதுவாக வெளியே போய்விட்டான். நானும் என் அறைக்கு வந்து விட்டேன். அவரும் என் பின்னோடேயே மெதுவாக என் அறையில் நுழைந்து, "பாவம், அவனை ரொம்பத் திட்டி விட்டேன்! அவனுக்கு ஏதாவது இனாம் கொடுக்கலாமென்று எண்ணு கிறேன். உன் அபிப்பிராயம் என்ன? சொல்லு!" என்று கேட்டார்.

நான் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த் தேன். "அடிக்கிற கைதான் அணைக்கவும் செய்கிறது என்று சொல்லுகிறார்களே, அது எவ்வளவு பொருத்தம்!" என்று மனத் துள் வியந்தேன்.

அவர் மறுபடியும், "அவன் இப்படித் தப்பு செய்யவில்லை என்றால் கோபித்துக் கொண்டிருந்த எஜமானியம்மாள் வழிக்கு வருவது எது? அவன் தப்பு பண்ணினானோ, என் காரியம் கை கூடிற்றோ!" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

நான் வேண்டுமென்றே கோபத்தை வர வழைத்துக்கொண்டு, "போங்கோன்னா! கம்பெனிக்குப் போக நாழிகை யாகி விட்டது!" என்றேன்.

என் வார்த்தைக்குச் சிறிதும் செவி சாய்க்காமல் அவர் என்னை நெருங்கினார்.

முன்னால் நெருப்பு அணைந்திருந்தது; இப்பொழுதோ அந்த நெருப்பின் சாம்பலும் நீறு பூத்து விட்டது!

## நந்தகிசோர் சொல்லுகிறான் :

### 14. கோமதியாற்றங் கரையிலே!

அன்று மாலை நாங்கள் மோட்டாரில் உலாவுவதற்காகப் புறப்பட்டோம். அன்று எங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை. ஏனெனில் அந்த மகிழ்ச்சி வெகு காலத்துக்குப் பிறகு அல்லவா எங்க ளுக்குக் கிட்டியிருக்கிறது!

ரூபராணியின் வதனத்திலும் ஒரு தனிக் களை வீசிக்கொண் டிருந்தது. எதற்கு எடுத்தாலும் தன் முத்து முறுவலால் என் உள்ளத்தைக் கவர்ந்த வண்ண மிருந்தாள். நேற்றுவரை அவளது வதன மண்டலத்தில் கோபம்-தாபம் என்னும் மேகங்கள் குமுமி யிருந்தன; காற்றே ஸ்தம்பித்து நின்று புழுக்கத்தை உண்டுபண்ணி யிருந்தது. இன்றோ நான் மலைச் சிகரத்தில் அமர்ந்து 'குளுகுளு' வென்று வீசும் காற்றை அனு பவித்துக் கொண்டிருந்தேன்.

கோமதியாற்றைச் சமீபித்ததும் நாங்கள் மோட்டாரிலிருந்து இறங்கி மெதுவாக நடக்கலானோம். ஐந்து ஆறு வருஷங் களுக்கு முன்பு வித்யாசங்கர் தன்னுடைய நட்பை நிலைநாட்டிக் கொள்ளும் பொருட்டுத் தானாகவே சமாதான உடன்படிக்கைக்கு வந்தானே, அதே இடம்தான் இது. நான் அடிக்கடி இங்கு வருவது உண்டு. இங்கு வந்ததும் என் பழைய நினைவுகள் துளிர்த்து எழும். அவன் அந்த இடத்தில் இல்லாவிட்டாலும் அவனுடைய கற்பனை யுருவம் என் மனத் திரையில் எழுந்து நிற்கும். எங்களிருவருக்கு மிடையே ஏற் பட்ட நட்பு முறியாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, நட்பின் அக்கினி குண்டத் துக்கே அவன் தன்னை இரையாக்கிக் கொண்டானே, அந்த இடத்தை நான் எப்படி மறக்க முடியும்?

இன்று நான் அங்கே கண்ட காட்சி என்னைத் தூக்கிவாரிப் போட்டது. அவ னுடைய கற்பனை யுருவத்துக்குப் பதிலாக அவனுடைய உண்மை யுருவமே அந்த மணல் திட்டில் காட்சி அளித்தது! அதே இன் முகம்; அதே ஒளி வீசும் கண்கள்; பார்ப்பதற்குத் தேவனை யொக்கும் அதே காந்தி வீசும் சரீரம்! நான் ஒரு கணம் வைத்த கண் வாங்காமல் அவனையே உற்றுப் பார்த்தேன். மறு கணம் வேக மாக ஓடி அவனைக் கட்டித் தழுவிக்கொண் டேன். அதற்கடுத்த கணம் அழுகையும் சிரிப்பும் கலந்த ஒரு புது விதமான நிலையில்





நாங்கள் இருவரும் லயித்து விட்டோம். ரூபராணி கற்சிலை போல் நின்று கொண்டு எங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து, அதே இடத் தில் உட்கார்ந்து நாங்கள் பேசலானோம்.

எல்லாருக்கும் முன் னால் நான் அவனிடம் என் குறையைத் தெரிவிக்கலானேன்.

"நீ ஒரு கல் நெஞ்சன், அப்பா! என் னிடம் சொல்லாமல், கொள்ளாமல் எங்கேயோ ஓடி விட்டாயே! இதுதான் சிநேகிதனுக்கு அழகா?......ஆமாம், நீ எங்கே இருந்தாய், எப்படி யிருந்தாய், என்ன செய்து கொண்டிருந்தாய்? எல்லா வற்றையும் விவரமாகச் சொல்லு!" என் றேன் நான்.

வித்யாசங்கர் சிரித்துக் கொண்டே, "மலைவாசம் செய்யப் போய்விட்டேன். வெகு குஷியாகக் கட்டு அவிழ்த்து விடப் பட்ட காளைபோல் கவலையற்றுச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தேன்!" என்றான்.

ரூபராணி, "மலைவாசம் செய்திருந்தால் கன்னம் ஒட்டிப் போய், கண்கள் குழி விழுந்து இந்த வயதில் இப்படி யாருக் காவது கிழடு தட்டிப் போயிருக்குமா?" என்றாள்.

"ஆமாம், அப்பா! ஆள் இப்படி ஒரேயடி யாக மாறிப்போய் விட்டாயே! உடம்பு, கிடம்பு சரியில்லையா, என்ன?" என்று கேட்டேன் நான்.

"என் உடம்புக்கு என்ன கேடு? மலை வாசம் செய்தால் உடம்பு கெடுமா, என்ன? ... அதிருக்கட்டும், உன் செய்தி என்ன? சௌக்கியம்தானே?" என்று கேட்டான் வித்யாசங்கர்.

"எங்களைப் பார்த்தாலே சுகமாக இருக் கிறோம் என்று தெரியவில்லையா? ஆமாம், ஒரேயடியாக நீ எங்களை மறந்தே போய் விட்டாயே!"

ரூபராணி வித்யாசங்கரைக் குறைகூறும் பாவனையில் பார்த்த வண்ணம், "ஓடினது தான் ஓடினீர்களே, இன்ன இடத்துக் குப் போகிறேன் என்று ஒரு கடிதம் எழுதி விட்டு ஓடியிருக்கக் கூடாதோ? அப்படிச் செய்திருந்தால் நாங்கள் இரண்டு பேரும் வந்து உங்களை இழுத்துக் கொண்டு வந்திருப்போமோ, இல்லையோ! எங்க ளுக்கு எவ்வளவு கவலையாக இருந்தது, தெரியுமா?" என்றாள்.

"உன்னைப் பற்றிச் சிந்திக்காத நாளே கிடையாது, அப்பா!" என்று நானும் ரூபராணி சொன்னதை ஆமோதித்தேன்.

"நீ நம்பினால் நம்பு; நம்பாவிட்டால் போ! நானும் உன்னைப் பற்றி எண் ணாத நாளே கிடையாது!" என்றான் வித்யாசங்கர்.

ரூபராணி குறுக்கிட்டு, "எதற்கு இந்தப் பொய்!" என்றாள்.

விஷயம் என்னவோ சாதாரணமானது தான்; ஆனால் எனக்கு அது பிடிக்க வில்லை. 'ரூபராணியை யார் இப்படி யெல்லாம் பேசச் சொன்னார்கள்? பேசா மல் நாங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண் டிருந்தால் அவளுக்குப் 'போதாதோ?' என்று நான் எண்ணினேன்.

"என்னைப் பற்றி இப்படி நீங்கள் நினைத்து விட்டால் அப்புறம் நான் என்ன சொல்லக் கிடக்கிறது? நான் கூறியது அவ்வளவும் உண்மை என்று நான் சொல்லலாமே தவிர உங்களை நம்பவைக்க என்னால் முடியுமா?" என்றான் வித்யாசங்கர்.

"ஆமாம், உன் அம்மாவைப் பற்றியே நீ கவலைப்படவில்லையே, எங்களைப் பற்றி ஏன் கவலைப்படப் போகிறாய்?" என்றேன் நான்.

இதைக் கேட்ட ரூபராணியின் முகத் தில் கோபக் குறி தோன்றியது. ஆனால் எனக்கோ, வித்யாசங்கரைப் பதில் சொல்ல முடியாமல் மடக்கி விட்டோமே என்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. (தொடரும்)

# பாவம், டாக்டர்!

சோமாஸ்

மிஸ்டர் தாதுலிங்கத்துக்கு லாட்டரிச் சீட்டு, பரிசுப் பத்திரம் இவைகளிலெல்லாம் அபாரப் பிரேமை யுண்டு. அதனால் அந்த வழிகளிலெல்லாம் அவர் எத்தனையோ தடவை பணச் செலவு செய்து ஏமாந்து போயிருந்தும் கொஞ்சங்கூட நம்பிக்கையை இழக்கவில்லை.

போர்க்களத்தில் போர் புரியும் வீரனுக்கு எதிரியினிட மிருந்து காயங்கள் ஏற்பட ஏற்படத்தான் எதிர்ப்புச் சக்தி அதிகமாகுமாம். அப்பொழுதுதான் அவன் அபரிமிதமான பலத்துடன் மூர்த்தண்யமாகப் பகைவர்களைத் தாக்க ஆரம்பிப்பானும். அதே மாதிரிதான் தாதுலிங்கமும் தோல்வி அடைய அடைய மேலும் மேலும் புதிய உற்சாகத்துடன் லாட்டரிச் சீட்டுகளில் பணம் கட்ட ஆரம்பித்தார்.

அன்று தாதுலிங்கம் வீட்டில் இல்லை. அப்பொழுது அவருக்கு ஒரு தந்தி வந்தது. அவர் பிள்ளை தந்தியைக் கை நடுக்கத்துடன் பிரித்துப் பார்த்தான்.

"அப்பா, சுப்பு! தந்தியில் என்ன இருக்கிறது? நீபாட்டுக்கு விஷயத்தைச் சொல்லாமலே அழுதால் நான் என்னவென்று நினைக்கட்டும்?" என்று அவன் தாயார் அழமாட்டாக் குறையாகக் கேட்டாள்.

"அம்மா ...! விஷயத்தை எப்படிச் சொல்லுவதென்றே எனக்குத் தெரியவில்லை. அப்பாவுக்கு லாட்டரியில் லக்ஷ ரூபாய் விழுந்திருக்கிறது!"

இதற்கு மேல் சுப்புவால் பேச முடியவில்லை. சந்தோஷம் தொண்டையை அடைத்தது.

அவன் தாயாருக்கும் பேச முடியவில்லை. "சுப்பு, அப்பா வந்ததும் அவரிடம் இந்தப் 'பிரைஸ்' விழுந்த சமாசாரத்தைச் சொல்லாதே! வெகு நாட்களாகப் பணம் கட்டிக் கட்டி அவர் ஏமாந்து நொந்து போயிருக்கிறார். இப்பொழுது திடீரென்று லக்ஷ ரூபாய் பிரைஸ் விழுந்திருக்கிறது என்று கேட்டால் அந்த அதிர்ச்சியில் அவருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும். ஆகையினால் நமது டாக்டர் ராமனை அழைத்து வந்து அவரை இது விஷயமாக அப்பாவிடம் பக்குவமாகச் சொல்லும்படி செய்ய வேண்டும்!" என்றாள்.

சுப்புவுக்கும் அது பேஷான யோசனையென்று தோன்றவே, தந்தியை மறைவாக வைத்துவிட்டு டாக்டர் ராமன் வீட்டுக்கு ஓடி விஷயத்தை அவரிடம் சொன்னான். உடனே டாக்டரும் தாதுலிங்கத்தின் வீட்டுக்குப் புறப்பட்டார்.

டாக்டர் ராமனும் தாதுலிங்கமும் வெகு நாட்களாக நண்பர்களாதலால் பல விஷயங்களைப் பற்றி இருவரும் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

"மிஸ்டர் தாதுலிங்கம், உங்களுக்கு லாட்டரியில் ஆயிரம் ரூபாய் பிரைஸ் விழுந்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார் டாக்டர் ராமன்.

"ஏன், ஒரு குதிரை வண்டி வாங்குவேன்!" என்றார் தாதுலிங்கம்.

"பத்தாயிரம் ரூபாய் கிடைத்தால்...?"

"ஒரு வீடு வாங்கிக் கொள்வேன்!"

"இருபதாயிரம் கிடைத்தால்?"

"நிலமும் வீடும் வாங்கிக்கொண்டு சுகமாயிருப்பேன்!"

"சரி, ஒரேயடியாய் ஐம்பதாயிரம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?"

"ஐம்பதாயிரம் ரூபாய் கிடைத்தால் ஒரு பங்களா, கார்; வேலையாட்கள் எல்லாம் ஏற்பாடு செய்துகொண்டு ரொம்ப ரொம்ப சௌக்கியமாயிருப்பேன்!"

டாக்டர் ராமன் தைரியமாகக் கடைசிக் கேள்வியைக் கேட்டார்.

"உங்களுக்கு லக்ஷ ரூபாய் பிரைஸ் விழுந்தால் என்ன செய்வீர்கள்?"

தாதுலிங்கத்தின் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது.

"டாக்டர் ஸார்! நீங்கள் சொல்லுகிறபடி எனக்கு லக்ஷ ரூபாய் லாட்டரி சீட்டில் விழுந்தால் என்ன செய்வேன், தெரியுமா? உங்களுக்கு உடனே ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து விடுவேன்!" என்றார்.

தாதுலிங்கம் இப்படிக் கூறியதுதான் தாமதம், டாக்டர் ராமன் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விட்டார்!



SUNSHINE Glaxo

ஸன்ஷைன்

கிளாக்ஸோ

குழந்தைகளை புஷ்டியாக வளர்க்கிறது

இந்தியாவில் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
எச். ஜே. பாஸ்டர் & கோ., லிட்.
பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - லாகூர்

குழந்தைகள் பராமரிப்பைப் பற்றிய சிறிய புத்தகம் 4 அணாவுக்கு ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயரையும் விலாசத்தையும் எச். ஜே. பாஸ்டர் & கோ. லிட்., த. பெ. 202, பம்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்.

'ஆஸ்ப்ரோ'
இதோ வந்துவிட்டது!




போலிகளை வாங்காதீர்கள்.
ஒவ்வொரு வில்லையின்மேலும் 'ஆஸ்ப்ரோ' என்ற வார்த்தை இருப்பதைக் கவனிக்கவும்
'ஆஸ்ப்ரோ' வலியையும் ஜுரத்தையும் 10 நிமிஷங்களில் போக்கும். இருதயத்துக்காவது வயிற்றுக்காவது கெடுதி செய்யாது



'ஆஸ்ப்ரோ'
கட்டுப்பாடு செய்யப்பட்ட விலைகள் :
3 வில்லைகள் கொண்ட பாக்கட் . . . 1 அணா
30 வில்லைகள் கொண்ட பாக்கட் . . . 10 அணா

விளியோகிப்பவர்கள் :
ஜே. எல். மாரிசன், ஸன் அண்டு ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்.
9/10, ஸெகண்ட் லேன் பீச், மதராஸ்
தபால் பெட்டி நெ. 1370, டெலிபோன் நெ. 4459

ஆஸ்ப்ரோ எங்கும் கிடைக்கும்










Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladen's Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

REGD. No. M. 4392

